# சன்மார்க்க தீபம்

## இரண்டாம் புத்தகம் 394


ஆக்கியோர்:

சி. வி. நாராயண ஐயர், M. A., L. T.

*Assistant Professor of History, Presidency College, Madras.*



கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,

சென்னை.

பதிப்புரிமை]  1938  [விலை அணா 7

கேஸரி அச்சுக்கூடம்,

சென்னை.

# FOREWORD

394

I feel honoured by the request of the author to link my name with his in his work SANMARGA DEEPAM which is, as its name implies, a lamp of Righteousness. The great danger to modern civilisation consists in the lower aims of life overwhelming and driving out the higher. Materialism, the worship of matter, is rampant everywhere. Mammon threatens to unseat God. Even in countries and communities paying homage to God, God is more present on the lips than in the hearts of men.

What, after all, is the purpose of human life ? It is physical, mental, moral and spiritual perfection consumating itself in the realisation of God. It can be expressed in one word *Culture*. Culture means sweetness ; culture means light ; culture means harmony ; culture means happiness. There can be no real culture unless there is an intermingling of the ideal and the real.

The author has endeavoured in this work to introduce the youth of India into the ideal realm of ancient Indian culture and modern Western culture so that every boy and girl of

India might be Indian and modern in a state of harmonious concord. The heroic temperament,

> "One equal temper of heroic hearts,
> Made weak by time and fate, but strong in will
> To strive, to seek, to find, and not to yield."

is the prime need of India to-day. This work is sure to create such "equal temper of heroic hearts" and therefore deserves wide public appreciation and encouragement.

**K. S. RAMASWAMI SASTRI,**
*District & Sessions Judge of Ramnad.*

# அறிவிப்பு

சன்மார்க்க தீபம் - இரண்டாம் புத்தகம் என்னும் பெயருடைய இச்சிறு நூல் இக்கால மாணவர்க்கு அகன்ற அறிவினையும் சிறந்த ஒழுக்கத்தினையும் அளித்து, அவர்தம்வாழ்க்கையைப் பயன்பெறச் செய்ய எழுதப்பட்டதாம். இதன்கண் காணப்படும் உலகப் பெருமக்கள் வரலாறுகளும், அவர்தம் பேருக்கச் செயல்களைப் பற்றிய விவரங்களும், மனத்தை ஒரு வழிப்படுத்தும் இனிய கட்டுரைகளும் படிப்போர் வாழ்க்கை உயர்வடைய இன்றியமையாத் தூண்டுகோலாக இருக்குமென்னுந் துணிபுடையேன்.

இச்சிறிய ஒரு நூலைப் படித்து அரிய ஒரு முன்னுரை அளித்த என் நண்பர் திவான்பஹதூர் K. S. இராமசாமி சாஸ்திரியார் அவர்கட்கு என் மனமார்ந்த நன்றி என்றும் உரியது.

அன்பன்,

**சி. வி. நாராயண ஐயர்.**

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | சன்மார்க்கம் .... | 1 |
| 2. | பொன் மொழிகள் | 3 |
| 3. | மாணவர் கடமை | 5 |
| 4. | காலத்தின் அருமை | 8 |
| 5. | அன்பே உயிர் நிலை | 11 |
| 6. | அழகின் அமைப்பு | 14 |
| 7. | சிக்கனம் .... | 17 |
| 8. | புத்தகம் அளிக்கும் புத்துயிர் | 21 |
| 9. | சரியான தொடக்கங்கள் | 24 |
| 10. | பாண்டித்துரைத் தேவர் | 27 |
| 11. | மனச் சாட்சி | 31 |
| 12. | கிராமச் சீர்திருத்தம் | 34 |
| 13. | தமிழ் வளர்த்த தனிப் பேராசிரியர் | 37 |
| 14. | நோயற்ற வாழ்வு | 41 |
| 15. | இந்திய ஊழியர் சங்கம் | 43 |
| 16. | பண்டிதை இராம பாய் | 47 |
| 17. | இசை இன்பம் | 51 |
| 18. | நாலந்தா சர்வகலாசாலை | 54 |
| 19. | அடிமைத்தனம் அகற்றிய அண்ணல் | 59 |
| 20. | அறம் வளர்த்த அசோகன் | 64 |
| 21. | உழைப்பால் உயர்ந்த முசோலினி | 69 |
| 22. | அமெரிக்கர் அறச் செயல் .... | 74 |
| 23. | இன்ப நிலை .... | 78 |
| 24. | நாட்டுக்கு உழைத்த டாட்டா | 84 |
| 25. | அற்பம் அற்பம் அன்று | 89 |

" இந்தியர்களே என் சகோதரர்கள். அவர்களே என் உயிர். இந்திய ஜன சமூகமே நான் பிறந்து வளர்ந்த தொட்டில்; என் இளமையின் இன்பப் பூங்கா; என் மூப்பின் தவச் சாலை. இந்திய நிலமே எனது சுவர்க்கம். இந்தியாவின் நலனே என் நலன். இதை முன்னுக்குக் கொண்டு வருதலே எனது முதல் கடமை ஆகும்.

—விவேகானந்த அடிகள்



சுவாமி இராமதீர்த்தர்

# சன்மார்க்க தீபம்

## இரண்டாம் புத்தகம்

### 1. சன்மார்க்கம்

1. மார்க்கம் சன்மார்க்கமே அன்றிமற் றொன்றில்லை.

—திருமூலர்.

சமரசம் என்பது நாடு, மொழி, சமயம், சாதி முதலியவற்றில் கட்டுப்படாது கடந்து நிற்கும் பரந்த கொள்கை. அதுவே எல்லா நாட்டினர், எல்லா மொழியினர், எல்லாச் சமயத்தினர், எல்லாச் சாதியினர் இடத்தும் இருக்க வேண்டுவதோர் உயர் ஞானம். இச் சமரசமே கடவுள் காட்சியை நல்கும்.

இச்சமரசத்துக்கு உரிய மார்க்கமே சன்மார்க்கம் என்பது. யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள ஒப்பிலாப் பொருளைக் கண்டறிதற்குற்ற மார்க்கம் அதுவேயாம். சன்மார்க்கத்துக்குச் சாதி யில்லை; மதம் இல்லை; நாடு இல்லை; நகரம் இல்லை; எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. அலகிலான் அருட் படைப்பில் தோன்றிய உயிர்கள் யாவும் ஒன்றெனும் கொள்கையோடு, அவற்றின் நலத்துக்கெனத் தொண்டு செய்தலே சன்மார்க்கத்தின் சாதனம் ஆகும்.

காற்றினால் அலைக்கப்படும் புயலைப் போன்று மனத்தை அங்கு மிங்கும் சிதறவிடாமல், அன்பெனும் ஆழியில் மனத்தை இருத்தி, மனச்சாட்சி என்னும் உள்ளொளி தெள்ளிதிற் கூறும்வண்ணம் நேர்மையான தொண்டு செய்து வாழ்தலே சன்மார்க்கத்தினர் கடனாகும். அவர் தன்னல மில்லாத தியாகிகளாகவே இருத்தல் வேண்டும். சன்மார்க்கத்தினர் எவரும் சுய நலக்காரராய் இருத்தல் இயலாது. அவர் பிற உயிர் வருந்தத் தம்முயிர் தரியார். அங்ஙனம் பிற உயிர்களைச் சன்மார்க்கத்தில் நிலைபெறச் செய்யவன்றோ, புத்த மகான் அரசைத் துறந்தார்! இயேசுநாதர் சிலுவையில் அறையுண்டார்!! முகமது நபி மெக்காவிலிருந்து மெடினாவுக்கு ஓடினார்!!!

"மனிதன் தன்னலத்தைப் பெரிதாகக் கருதி உழன்று வரும்வரையில் அவன் விலங்கினும் கடைப்பட்டவனேயாவன். தனது குடும்ப நலத்துக்கு உழைக்கையில், அவன் விலங்கினும் சிறிது உயர்வடைகின்றான்; தனது சமூகம் அல்லது நாடு முதலியவற்றைக் கருதி உழைக்கையில் மேலும் சிறிது உயர்நிலையை எய்துகின்றான். நாகரிகமற்ற மக்கள் உட்பட மக்கள் தொகுதியை ஒரே குடும்பமாக எண்ணித் தொண்டு செய்கையில், அவன் உண்மை மனிதனாக விளங்குகின்றான்," எனக் கூறும் காந்தியடிகளின் கனிவுரை கருத்தில் இருத்தத் தக்கது.

ஆகவே, சுயநலப் பற்றற்று மன்பதைக்குத் தொண்டு செய்தலே மனிதனது சிறந்த கடமையாகும். இதுவே சன்மார்க்கம் நமக்கு அறிவிப்பது. உலகப்

பெரியார்களான புத்தமகான்—இயேசுநாதர்—முகம்மது நபி—இவர்கள் தங்கள் வாழ்க்கையால் நமக்கு அறிவித்தது யாது? தங்களைப்போலப் பற்றற்று, 'உயிர்களுக்கு உழைக்கும் நெறியை—சன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுக,' என்பதேயாம்.

தன்னளவில் தூய்மையுடையவனும், எவ்வுயிர்க்கும் அன்போடு தொண்டு செய்பவனும் உயிர் வாழ்பவனே மகாத்துமா எனப்படுபவன். அவனே சன்மார்க்கத்தைச் செவ்வையாகக் கடைப்பிடித்து நடப்பவன். அவனுக்கு யாதும் ஊரே ; யாவரும் கேளிரே. ஆ! ஆ! இந்நிலை எய்தியதாயின், ஒருவன், அன்பு வடிவாயுள்ள அருட் பெருஞ்சோதியில் இரண்டறக் கலந்தவனேயல்லனோ?

---

## 2. பொன் மொழிகள்

1. அன்பு, கர்மங்களையும் யோகத்தையும் அறிவையும் விடச் சிறந்தது.

2. உன்னுள்ளே இல்லாத ஒன்றை நீ, வெளியே பார்க்க இயலாது.

3. நீ எதை நினைக்கின்றனையோ அதுவேயாகின்றாய்.

4. தைரியத்துடனும் உண்மையுடனும் சிரத்தையுடனும் சன்மார்க்கத்தைப் பின்பற்றிச் செல். நீ பரிபூரணத் தன்மையை அடைவது நிச்சயம்.

5. அன்பென்பது கால தேசங்களைக் கடந்தது ; அகண்டமானது.

6. மதம் ஒன்றே; ஆயின், நாம் வடிவங்கள், அறிகுறிகள், உதாரணங்கள் இவற்றுடன் அறியாமை யாற் போராடுகின்றோம்.

—விவேகானந்த அடிகள்

7. உனது திறமைக்கேற்ற தொழிலை ஏற்று, அதை நன்கு நிறைவேற்றுக.

8. உனது உள்ளம் உவந்து செய்யும் வேலையே உன் இலட்சியம், சக்தி, லீலை என்றறி.

9. பிறர்க்கு நன்மை செய்யாத ஒருவன், தான் மட்டும் பிறரிடமிருந்து நன்மையை எதிர்பார்த்தல் மதி யீனமாகும்.

10. வாழ்க்கையின் இன்னல்களைப் பொறுப்ப வன் முடிவில் மேலான இன்பத்தை அடைவான்.

11. மூட நம்பிக்கையே கொடிய சிறைச்சாலை ஆகும்.

12. பயன், பொறுமை முதலிய சிந்தனைகளே தீமைக்கு மார்க்கம்.

13. பெரும்பாலான மக்கள் பிதற்றிப் பின்பற்றி வரும் அறநெறிகள் என்பன, போலிப் புகழ் பெற்ற மருந்துகட்குச் சமமாகும். அவற்றால் நன்மை அணு வளவும் உண்டாகாது.

14. மனத்தை அடக்கி நேரிய வழியில் நடப்ப வனே சுதந்தர வீரன் ஆவன்.

—பிரேடெரிக் நியேஷன்

---

# 3. மாணவர் கடமை

1. ஒரு மனிதனுடைய வாழ்நாளில் சிறந்தது இளமைப் பருவமே. அப்பருவத்தில் கொள்ளும் பழக்க வழக்கங்களே இறுதிவரை நீடித்திருப்பன.

—ஜான் ரஸ்கின்

2. மாணவரே தாய்நாட்டு உயர்வையோ தாழ்வையோ நிர்மாணிக்கக் கூடியவர்.

—காந்தியடிகள்

இளமைப் பருவம் காலைப் பொழுதை ஒக்கும். காலை, மாசற்றுப் பொலிவுற்று விளங்குவதை ஒப்ப, இளமைப் பருவமும் மாசற்றுப் பொலிவுற்று விளங்குவதாகும். ஆதலின், இவ்விளம் பிராயத்தில், உடல் வளர்ச்சியையும், மன வளர்ச்சியையும், சன்மார்க்கப் பயிற்சியையும் பழகி வருதல், பிற்கால வாழ்க்கைக்கு மிக்க நன்மையைப் பயக்கும். உலகிடைத் தோன்றிய ஒவ்வொருவனும் தனது வாழ்க்கையைத் தனக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு செவ்வனே வாழ்ந்து வரல் வேண்டும்.

இளமைப் பருவமுடைய நீங்கள் உங்களைப் பெற்று வளர்க்கும் முன்னறி தெய்வங்களான தாய் தந்தையரிடம் வணக்கமும் அன்புங் கொண்டு வளர்தல் உங்கள் சிறந்த கடமையெனக் கொள்க. இரண்டாவதாக வேண்டற்பாலது உடற்பயிற்சி. நோயற்ற வாழ்வு வாழ்ந்தாற்றான் உலகப் பணி செய்ய இயலும். ஒருவன் தனக்கும், தன் குடும்பப் பாதுகாப்புக்கும், தன் நாட்டு நலத்துக்கும் செய்ய வேண்டும் தொண்டுக்கு உடல் வன்மையைப் பெற்றிருத்தல் வேண்டும். உடல்

வன்மை இல்லை எனின், உங்கள் வாணாள் வீணாளாகும் என்பதை மறவாதீர்கள்! மறவாதீர்கள்!

மூன்றாவதாக வேண்டப் படுவது மனப் பயிற்சியாகும். கல்விப் பயிற்சியே மனப் பயிற்சிக்குச் சாதனமாகும். நீங்கள் பள்ளிப் படிப்போடு நின்று விடாமல், உலக வர்த்தமானப் பத்திரிகைகள், விஞ்ஞான—சன்மார்க்க நூல்கள், அறிவு—மொழி வளர்ச்சிக்குரிய நூல்கள் முதலியவற்றை ஊக்கத்தோடு கற்றுவரல் வேண்டும். சிற்பம், சங்கீதம், சித்திரம், காவியம், கைத்தொழில் முதலிய கலைகளிலும் பயிற்சி பெறுதல் வேண்டும்.

இயற்கையின்பால் காணப் பெறும் அழகொழுகும் அரிய தோற்றங்களைக் காண்கையில் ஆண்டவன் அருட் பொலிவை நினைந்து நெக்குருகுதல் வேண்டும். அழகிய மனித உடல், பிற தோற்றங்கள் இவற்றைக் காணுதல் கண்களுக்குப் பெரு விருந்தளிப்பதாகும்; மனம் அமைதியும் களிப்பும் பெறுகின்றது. ஆதலின், நீங்கள் வானம், கடல், சூரிய சந்திரர் தோற்றம், விண்மீன்களின் விளக்கம், மரங்கள் செறிந்த சோலைகள், சுவை பொருந்திய உணவுப் பொருள்கள், மணங் கமழும் மலர்கள், புற் பூண்டுகள் நிறைந்த வெளிகள் ஆகிய இவற்றைக் கண்டு இயற்கை அழகையும் இறைவன் அருளையும் எண்ணி எண்ணி, அன்பு நிறைந்த உள்ளத்தராதல் வேண்டும்.

தாய் மொழியில் சிறந்த பயிற்சி பெறுதல் உங்கள் கடமைகளில் ஒன்றாகும். பரீட்சைகட்கு வேண்டும் அளவே தாய் மொழியில் உள்ள நூல்களைக் கற்றல்

தவறு. தமிழ் மொழியில் உள்ள சிறந்த நூல்களைப் பிழையறக் கற்றுத் தமிழ்த் தொண்டு புரிதலையே நீங்கள் கருத்தில் இருத்துதல் வேண்டும். மொழிப்பற்று இருப்பின், நாட்டுப் பற்று நனி சிறக்கும்.

நீங்கள் மேனாட்டு மாணவரைப் பெரிதும் கவனித்தல் வேண்டும். அமெரிக்காவில் மாணவ மாணவிகள் வாழ்க்கையில் புதிய புதிய மாறுதல்கள் காணப்படுகின்றன. அவர்கள் மன உறுதியும் தன்னம்பிக்கையுங் கொண்டு விளங்குகின்றார்கள்; புத்தகங்களிற் காணப்பெறாத அரும்பெரு விஷயங்களைப்பற்றி வியப்புறும் விதம் அறிந்துள்ளார்கள். அவர்களுக்கிருக்கும் உலக விஷயங்களைப் பற்றிய பொது அறிவை ஆசிரியர்களும் கண்டு வியக்கின்றார்கள். அப்பிள்ளைகள் அபாயத்தினின்று காக்கும் இரட்சகரைப் போன்றும், அணி வகுத்து விடப் பெற்ற வீரர்களைப் போன்றும் விளங்குகின்றார்கள். முன்னரே பழக்கப்பட்டவர்களைப் போல அவர்கள் எல்லாத் துறைகளிலும் ஈடுபடுகிறார்கள். நிர்மலமான மனத்தோடும் மரியாதையோடும் அவர்கள் ஆசிரியர்களிடம் நடந்து கொள்ளும் முறை நீங்கள் கண்டு பின்பற்றத் தக்கது.

உங்களுக்குள் கூட்டுறவு இயக்கம ஏற்படல் வேண்டும். ஐரோப்பியப் பெரும் போருக்குப் பின்னர், ஜெர்மனி நாட்டு மாணவர் தமக்குள் கூட்டுறவு இயக்கங்களைத் தாபித்துள்ளனர்; அவற்றின் மூலமாக உடல் வன்மைக்குரிய பயிற்சிகளையும், சாத்திர ஆராய்ச்சிகளையும், நாட்டின் பாதுகாப்புக்கான பல்வேறு சாதனங்களையும் பெருக்குகின்றனர். அவர்கள் வசிக்கத் தனி

அறைகளும், உணவு வசதியும், பிறவும் பெறத்தக்க வாறு அவர்களே பொறுப்பாளிகளாக நின்று வேலை செய்கிறார்கள் ; இவற்றிற்குண்டாகும் செலவைத் தங்க ளுக்குள் வீதாசாரப்படிப் பங்கிட்டுக்கொள்ளுகிறார் கள். இம்முறையால் மாணவர் ஒற்றுமையோடு எக்காரி யத்தையும் செய்ய வசதி உண்டாகிறதன்றோ ?

அன்புள்ள பிள்ளைகளே, மேற்கூறிய விதிகளைப் பின்பற்றி, நீங்கள் சன்மார்க்கத்தில் தொண்டு செய்து வாழ்வீர்களாயின், உங்களால் நம் மொழியும் தொழில் களும் நமது சமூகமும் நமது நாடும் விரைவில் முன் னேற்றம் அடையுமென்பதில் ஐயமில்லை.

---

## 4. காலத்தின் அருமை

1. காலத்தின் விலையை அறிந்துகொள். காலமே உன் உயிர். அதனை வீணாக்குவது, உன்னை நீயே கொலை செய்து கொள்வதைப் போலாம்.

—சார்ல்ஸ் வாக்னர்

2. அருவினை யென்ப வுளவோ? கருவியாற்
காலம் அறிந்து செயின்.

—திருவள்ளுவர்

மனிதன் வாணாட்கள் சில ; அவற்றுள் பல நாட் கள் பிணியால் கழிகின்றன ; சோம்பலால் கழிகின்ற நாட்கள் சில ; தூக்கத்தால் கழிகின்றவை பல. ஆயின், மனிதன் தன் வாணாட்களில் என்ன பயனுடைய தொண்டைச் செய்யக் கூடும்! அவன் கற்றற்குரிய நூல்கள் பல ; ஆற்ற வேண்டும் தொண்டுகளோ பல; ஆதலின், அவன் இயற்கையாய் அமைந்த தூக்கத்துக்

குரிய பாதிக் காலத்தைக் கழித்து, எஞ்சிய காலத்தில் நோயணுகாது உடலோம்பி, செந்நெறியில் வாழ்க்கையை நடத்தி, வருந்திக் கற்றல் வேண்டும்; கற்றபின் மனித உடம்பெடுத்ததன் தலையாய நோக்கமாகிய சமூகத் தொண்டு புரிதல் வேண்டும்.

இத்தகைய பெரிய வேலையைச் செய்யக் கடமைப்பட்டுள்ள ஒவ்வொருவனும் தன் காலத்தை வீணாக்குதல் கேட்டை விளைவிக்கும். இன்றைக்குச் செய்ய வேண்டும் வேலையை நாளை செய்வதால் நன்மை யாது? நாளைக்குரிய வேலையைச் செய்வதென்று? இங்ஙனம் பார்த்தால், ஒரு நாள் வேலை தள்ளிக்கொண்டே போகுமன்றோ? தான் செய்யக் கடமைப்பட்டுள்ள வேலையைக் குறித்த காலத்தில் செய்யாதவன், சோம்பலுக்கும் அழிவுக்கும் தன்னை இரையாக்குகின்றான். தன் வேலைகளைச் செவ்வனே உரிய வேளைகளில் செய்து முடிப்பவன் மகிழ்ச்சியுறவோ, உடற் பயிற்சி செய்யவோ, தூங்கவோ நேரத்தைக் காண்கிறான். அவன் மகிழ்வுடனும், உடல் உரத்துடனும், களைப்பின்றியும் காணப்படுகிறான்.

ஒருவன் வாழ்க்கை உயர்வடைவதோ அன்றித் தாழ்வடைவதோ, அவனது கால ஒழுங்கைப் பொறுத்துள்ளது. அவ்வக் காலத்தில் அவ்வவ் வேலையைச் செய்து முடிப்பவன் படிப்படியாக உயர்ந்த நிலையை அடைகின்றான். அவனது அகமும் முகமும் மலர்கின்றன. மகிழ்ச்சியால் உடல் உரம் பெறுகிறது. 'நமது கடமையை முடித்து விட்டோம்' என்ற குதூகல எண்ணம் ஒன்றே மனிதனுக்கு மட்டற்ற இன்பத்தை உண்டாக்கும்.

ஏறக்குறைய இந்தியாவைத் தன் ஒரு குடைக்கீழ் ஆண்ட அன்பு மதத்து அசோகன், காலத்தின் அருமையை நன்கறிந்து நடந்தவன் ஆவன். அவ் வேந்தன் இரவிலும் பகலிலும் கனவிலும் நனவிலும் தன் குடிகள் நன்மையிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தான். காலை நான்கு மணி முதல் இரவு பன்னிரண்டு மணி வரை அவன் வேலை செய்பவன். பன்னிரண்டு மணிக்கு மேற்றான் அவன் முக மலர்ச்சியுடன் (அன்று தன் கடமை முடிந்ததென்பதற்கு அறிகுறி போலும்!) துயில் கொள்ளச் செல்வனும். இங்ஙனமே, இங்கிலாந்தை ஆண்டுவந்த ஆல்ப்ரேட் (Alfred the Great) அரசனும் ஒருநிமிட நேரத்தையேனும் வீணாக்காமல், தன் குடிகள் நன்மைக்காகத் தன் வாணாட்களைச் செலவழித்தானாதலின், உலகம் உள்ளளவும் அவனது பெயர் குன்றின்மீதிட்ட விளக்குப் போல ஒளிர்ந்துகொண்டிருக்கின்றது.

நம் முன்னோர்கள் உடற் பயிற்சி, மனப் பயிற்சி, தூக்கம், முதலாயவற்றை உரிய காலங்களில் தவறாமல் செய்து வந்ததாற்றான், நீடிய ஆயுளைப் பெற்றுப் பணி செய்து புகழ் பெற்றார்கள். மாணவர்களான நீங்களும், படிக்க வேண்டுங் காலத்தில் படித்தும், எழுதவேண்டுங் காலத்தில் எழுதியும், இங்ஙனே ஒவ்வொன்றையும் அதனதனுக்குரிய காலத்தில் செவ்வனே செய்துவரின், 'தோல்வி' என்பதே உங்கள் வாழ்க்கையில் காணக் கூடாத ஒன்றாகும். எங்கும் வெற்றியே பரவிநிற்கும். உங்கள் அகமும் முகமும் மலர, வாழ்க்கையை நேரிய நெறியில் நடத்தக் கூடும்.

ஆதலின், 'பருவத்தே பயிர் செய்' என்னும் மூதுரைப்படி, ஒவ்வொன்றையும் அதனதனுக்குரிய பருவத்தில் செய்து முடித்து வெற்றி பெறுவதே உங்கள் கடமையாகக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கை நல் வாழ்க்கையாகும்.

ஞாலங் கருதினும் கைகூடும் காலங்
கருதி யிடத்தாற் செயின். 1

காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். 2

—திருக்குறள்—திருவள்ளுவர்

## 5. அன்பே உயிர் நிலை

1. கல் போன்ற அண்டமும் அன்பினால் ஊடுருவப் படும். அன்புள்ளவன் கண் இழந்தவனாயினும், எங்கும் பார்க்கும் வல்லமை அவனுக்கு உண்டு. அவன் துன்பத்தையும் இன்பத்தையும் அன்பினால் ஒன்றுபடுத்துகிறான்.

—எமர்சன்

2. அன்பினால் சீவகாருண்யமும், சீவகாருண்யத்தால் மன அமைதியும் உண்டாகும். இந்நிலையே கடவுள் நிலை.

—விவேகானந்த அடிகள்

அன்பே கடவுள் உறைவிடம். ஆண்டவன் வடிவமும் அஃதே. அன்பில்லா இடத்தில் ஆண்டவன் இல்லை. ஆண்டவன் எங்கும் நிறைந்திருப்பதால் அன்பும் எங்கும் நிறைந்துள்ளது. அத்தகைய அன்பை அணியாகப் பெற்றவரே பணி செய்யும் பெரியோர் ஆவர்.

பகைவனாயினும், அவனிடம் அன்பைச் செலுத்துவதே அன்பர் தன்மையாகும். அன்பு வடிவான ஆண்டவனால் படைக்கப் பெற்ற எண்ணிலாப் பொருள்கள் யாவும் அன்பு மயமானவையே. மக்கட் கூட்டத்தில் எக்குலத்தானாயினும், எந்நிறத்தானாயினும், எத்தொழிலினனாயினும், எந்நிலையினன் ஆயினும், அவன் ஆண்டவன் அருமை மகனே. அவனும் அன்புடைமைக்கும் அன்பு பெறுதற்கும் பாத்திரமானவனே. இவ்வுண்மை ஒவ்வொருவர் உள்ளத்தும் ஊன்றி இருத்தல் வேண்டும்.

ஆண்டவன் ஏழை மக்களைக் காக்கவே செல்வரைப் படைத்துளன். இதனை மறந்து, செல்வர் பலர், தம் ஏழைச் சோதர சோதரிகளை மறந்து, தம் சுயநலக் கடலில் மூழ்கி, ஆண்டவன் அன்பு நெறிக்கென அருளிய செல்வத்தை உயர்ந்த ஆடை அணிகளுக்கும், வாகனாதிகட்கும் வறிதே செலவழித்தல் எத்துணைப் பேதைமை! புன் புலால் யாக்கையை அலங்கரிக்கவும், வாகன மேறவும், சிங்கார மாட மாளிகைகளில் வசிக்கவும் ஆண்டவன் செல்வமளித்திலன். அன்பு கனிந்த அறச் செயலைச் செய்யவே அண்ணல் அருஞ் செல்வம் அளித்துளன். அன்பு என்னும் அருங்குணம் இருப்பின், செல்வர் இவ்வாறு நடப்பரோ?

செல்வர்களிடம் கூலி வேலை செய்து பிழைக்கும் ஏழை மக்களை எண்ணுந்தோறும் மனம் கவல்கின்றது. அந்தோ! அவர்கள் படுந் துயர் பகரத் தரமன்று. தாங்கள் விதிக்கும் கொடிய தண்டனைகளைப் பெற்றுத் தங்கட்கு வேலை செய்யவே கடவுள் ஏழை மக்

களைப் படைத்துளன் என்றெண்ணி, செல்வர்கள், அவர்களைக் கேவலம் விலங்குகளைப்போல நடத்துகின்றார்கள். இச்செல்வர்கள் தங்களைக் கூலியாட்களின் நிலையில் வைத்துச் சிறிதுநேரம் சிந்திப்பார்களாயின், இக்கொடுமைகள் சமூகத்தில் நிகழுமோ? கூறுங்கள்.

உலகில் அன்பே தலை சிறந்ததென்றும், அதனை அடைதலே மனிதப் பிறவியின் தலையாய நோக்கமென்றும் உலகப் பெரியார்கள் உபதேசித்த தெல்லாம் வீணேயோ? ஆ! அன்பெனும் அருங்குணம் ஒவ்வொருவர் உள்ளத்தும் செயலினும் ஒளிருமேயாயின், இவ்வுலகமே பூலோக சுவர்க்கமாக விளங்காதோ? அன்பினுல் கொடிய உயிர்களையும் வசப்படுத்தலாம். கள்வனையும், கொலையாளியையும் அன்பினுலும், இனிய மொழிகளாலும் நல்லவனுக்கலாம். அன்பால் இயலாததொன்றில்லை.

அரசு துறந்த இளங்கோவான புத்த மஹான் அன்பு மதத்தைப் பரவச் செய்தார்; 'அன்பாற்றுன் உலகம் துன்பம் ஒழித்து இன்பம் நுகரும்' என்றறைந்தார். அப்பெரியார் காட்டில் உறைந்த காலை ஒருநாள் கள்வன் ஒருவன் அவரிடம் இருந்த கிண்ணம் ஒன்றைக் கவர்ந்து சென்றுன். அதுகண்ட சீடன் மகானிடம் முறையிட, பெரியார், "ஐயோ! பாவம்!! அவன் எடுத்துச் சென்றது பழைய கிண்ணமாயிற்றே. இங்குள்ள புதிய கிண்ணத்தைக் கொண்டுபோய்க் கொடு. இஃது அவனுக்கு நீண்ட நாள் உழைக்கும்," என்றனர். சீடன் புதிய கிண்ணத்தோடு விரைந்தோடிக் கள்வனிடம் அடிகள் கூறியதைக் கூறிக் கிண்ணத்

தைத் தந்தான். ஆ! என்ன அற்புதம்!! அடிகள் உரைத்த அன்பு மொழிகளைக் கேட்ட அக்கள்வன் மனம் மாசற்றது; விழிகள் நீரைப் பெருக்கின. அவன் விரைந்தோடி அடிகளைப் பணிந்து, அன்று முதல் அவர் உண்மைச் சீடன் ஆனான். கள்வனின் கசடறுக்கும் அன்பின் திறந்தான் என்னே!

இயேசு நாதரும் அன்பு வழிச்சென்று, அன்பு நெறியையே அறைந்த பெரியாராவர். அவர் தம்மைச் சிலுவையில் அறைந்தவரிடத்தும் அன்பே காட்டினர். "ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு உனது மறு கன்னத்தையும் காட்டு; உன் மேலங்கியைக் கவர்பவனுக்கு உனது அரை ஆடையினையும் கொடு; அவன், நீ காட்டும் அன்புக்கு இரையாகி நல்லவனாவான்," எனக் கூறிய இயேசுநாதரின் பெருமைதான் என்ன!

## 6. அழகின் அமைப்பு

1. அழகுள்ள பொருள் என்றும் இடையறா இன்பத்தை அளிக்கும்.

—கீட்ஸ்

2. நீ தனியே இருக்கும்போது இயற்கையழகு உன்னைத் தன்பால் இழுப்பதை அறிவதில்லையோ?

—எமர்சன்

இரவும் பகலும் தோன்றி இன்பந்தரும் இந்த அழகிய உலகில் நாம் பிறக்கப் பேறு செய்தவரே யாவோம். எத்திசை நோக்கினும் அழகின் அமைப்பே இலங்குகின்றது. உலகம், வானம், கடல், சூரிய சந்திரர் தோற்றம், விண் மீன்களின் விளக்கம், மரங்கள்

செறிந்த சோலைகள், சுவை பொருந்திய உணவுப் பொருள்கள், மணங் கமழும் மலர்கள், புற் பூண்டுகள் நிறைந்த வெளிகள் இவற்றுள் ஒவ்வொன்றிலும் அழகு விளங்குகின்றதன்றோ?

இங்ஙனம் இவை அழகு பெற்று மிளிர்வதைக் காண, இவற்றைப் பயன் கருதியே இறைவர் படைத்திருப்பரென எண்ணவேண்டி யிருக்கிறது. இத்தகைய அழகிய உலகை நோக்குகையில், இறைவரே அழகை விரும்புகின்றனர் என்பதும் தேற்றமன்றோ? அவரே அழகை ஆசிக்கையில், அவரால் படைக்கப்பட்டுள்ள நாம் அழகை விரும்பத்தான் வேண்டும். ஆனால், இவ்வுண்மையை உணர்ந்தோ—உணராமலோ நாம் அழகை விரும்பி வருகின்றோம்.

நாம் உண்டுண்டு உறங்குவதற்கே பிறப்பெடுக்கவில்லை. இயற்கை அற்புத அழகை நுகர்ந்து, அதன் வாயிலாக இறைவர் அருட்டிறனை நினைந்து, நெஞ்சம் அன்பு கனிந்து, அன்புருவான அண்ணலைச் சேரவே அரிதினும் அரிதான மக்கட் பிறவியை நாம் எடுத்துள்ளோம். ஆதலின், உலகிடைத் தோன்றும் ஒப்பிலா அழகை அகமகிழக் கண்டு நுகர்தலையும் நமது கடனாகக் கொள்ளவேண்டும்.

உலகம் அழகு வடிவானது. அதனைக் காணும் நாம் நம் அகத்தையும் புறத்தையும் அழகுபடுத்த வேண்டும். புறத்தழகே அழகு என இக்கால மக்கள் மயங்குவர். தோல் அழகோ தோற்றத்தின் அழகோ பெரிதல்ல. உள்ளத் தூய்மையின் அழகே அழகெனப் படும். அகத்தழகும் புறத்தழகும் பொருந்தியிருப்

பின் அச்சேர்க்கை, நிறைந்த அழகு எனப்படும். கல்வி அறிவு நிறைந்து, உடலமைப்புப் பொருந்தி, ஒழுக்கம் வளர்ந்துள்ளோரே உண்மை அழகைப் பெற்றவராவர்.

உலகில் அழகற்றதெனக் கூறித் தள்ளிவிட எப்பொருளையும் இறைவர் படைத்திலர். ஒவ்வொரு பொருளிலும் அழகு வழிகின்றது. இறந்த நாயைச் சீடர் பரிகசித்து அருவருத்தபோது இயேசு நாதர் அவர்களை நோக்கி, "ஆ! இறந்து கிடக்கும் இந்நாயின் பற்களைப் பாருங்கள்: அவை எவ்வளவு வெண்மையாகக் காணப்படுகின்றன! அவற்றின் அழகொழுகும் தோற்றத்தைக் கண்டு மகிழுங்கள்," எனக் கூறியதை நினைக்குந்தோறும் நெஞ்சம் மலர்கின்றதன்றோ?

நம் தமிழ்ப் புலவர் பலர் இயற்கை யழகைத் திறம்படப் பாடிப் போந்தனர். அழகைப் பற்றிக் கூறாதாலே தமிழ் மொழியில் இல்லை எனத் துணிந்து கூறலாம். மலையினின்றிழியும் அருவிநீர்த் திவலைகளிலும், ஏன்? ஒவ்வொரு மிகச் சிறிய பொருளிலும் அவர்கள் அழகை நுகர்ந்து நுகர்ந்து மனங் களித்துப் பாடியுள்ளார்கள். இங்ஙனம் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு மொழியிலும் அழகின் அமைப்பைப் பற்றிக் கூறி வியக்கா நூலே இல்லை என்னலாம்.

இத்தகைய அழகொழுகும் அரிய தோற்றமோ, சிறிய பொருளோ தனது அழகிய பார்வையை நம்மீது செலுத்துகின்றதென்பதை அறிய நீங்கள் வியப்புறுவீர்கள். ஆம்; இயற்கையழகு நம்மீது பார்வையைச் செலுத்துகின்றது. அஃது நம்மை நோக்கி அழகு வழியப் புன்முறுவல் கொள்கின்றது. அப்பொழுது

நம் மனமும் முகமும் மலர்கின்றன ; நாமும் அழகு பெற்றே விளங்குகின்றோம். எங்ஙனம்?

நறுமணங் கமழும் பூஞ்சோலைக்குள் நுழைந்த வாடிய முகத்தாள் ஒருத்தி, தன் மனக்கவலையினூடே நறுமணத்தை நுகர்கின்றாள் ; அவள் மனம் மணத்தின் வழிச் சென்று, மணத்தின் பிறப்பிடமான மலரை விழிகள் நோக்குகின்றன. ஆ! அதுகாலை இதழ்களை அகல விரித்து, நறுமணத்தை நாற்புறமும் வீசி, மென் காற்றால் அசைந்தாடும் பூவின் தோற்றம் பெண்ணின் விழிகளைக் கவர்கின்றது. மனமும் கண்ணும் மலர்மீது பாய, மங்கை மனக் கவலையும் மறைகின்றது. அந்நிலையே வேண்டற்பாலது ; உடனே மங்கையும் மலரும் அழகொழுகும் அரிய தோற்றங்களாகி, அழகெனும் சோதியில் இரண்டறக் கலக்கின்றனர். இந்நிலையினும் பேரின்பம் யாதுளது?

---

## 7. சிக்கனம்

1. சிக்கனம் இருந்தால், யாரும் செல்வராக முடியும்.

—ஜான்சன்

2. சிக்கனத்தோடு வாழ்தல் நாட்டு முன்னேற்றத்துக்கு நன்மையைப் பயக்கும்.

—பண்டித மாளவியா

ஒரு குடும்பத்திலோ அன்றி ஒரு சமூகத்திலோ வறுமை தலை காட்டாதிருக்கச் செய்ய வேண்டுமாயின், குடும்பத்தினரோ — சமூகத்தினரோ சிக்கனத்தைக் கையாள வேண்டும். சிக்கனம் பரம ஏழையையும் பணக்

காரனுக்கும் என்பது முற்றிலும் உண்மையே. வருவாய் எவ்வளவோ அவ்வளவும் செலவு செய்பவனும், வருவாய்க்கு மேல் செலவு செய்பவனும் தன் குடும்பத்துக்கோ, அன்றிச் சமூகத்துக்கோ, சிறப்பாகத் தனக்கோ எவ்விதத்திலும் நன்மை செய்பவனுகான். அவனைக் காணும் பிறரும் அவன் வழிப் பின்பற்றிப் பாழடைவர்.

ஒருவன் தன் வருவாயில் தனக்கு இன்றியமையா வாழ்க்கையை நடத்தப் போதுமான பணத்தைச் செலவிட்டு, எஞ்சியதைச் சேர்த்து வைத்தலே நன்று. அங்ஙனம் செய்பவன் தனக்கும் தன் குடும்பத்துக்கும், தன் சமூகத்துக்கும் பெரு நன்மை செய்பவனுவான்; அவனைக் கண்ணுறும் பிறர் அவனைப் பின்பற்றி நன்மை பெறுவர். ஆகவே, சிக்கனத்தோடு வாழும் ஒருவனுல் படிப்படியாக ஒரு சமூகம் செல்வ நிலையில் முன்னேற்றம் அடைகின்றது.



அமெரிக்கக் கோடீச்சுரர்களுள் ஒருவரான ஜான் டி. இராக்பெல்லர் என்பவர் முதன் முதலில் ஒரு குமாஸ்தாவாக இருந்தவர். அவர் சிக்கன வாழ்வு நடத்துபவர்; குமாஸ்தாவான மூன்றாண்டுகட்குள் 165 டாலர் சேர்த்து வைத்தார்; பின்னர் அத்தொகையைக் கொண்டு தாமாகவே தொழில் நடத்தி, இன்று உலகம் போற்றும் கோடீச்சுரராகவும், 165 கோடி ரூபாய் தருமஞ் செய்துள்ள பெரு வள்ளலாகவும் விளங்கி வருகின்றார். சிக்கன வாழ்வினால் வந்த உயர் நிலை இது!

இங்கிலாந்தில் உள்ள சைகிள் கம்பெனி ஒன்றில் வேலையாளாக இருந்து, ஐந்து பவுனைச் சேர்த்து, அத்தொகையைக் கொண்டு சிறிய சைக்கிள் கடை ஒன்றை வைத்து, சிக்கன வாழ்வு நடத்தித் தம் அறிவின் வன்மையால் மோட்டார் செய்யக் கற்ற சர். வில்லியம் மோரிஸ் இன்று உலகப் பிரசித்தி யடைந்து மோட்



டார் அரசர் எனப் பெயர் பெற்றுள்ளார். இன்று இங்கிலாந்தில் வாழ்கின்ற பெருஞ் செல்வருள் அவர் ஒருவராவர். இவ்வுயர் நிலைக்கு அவர் வரக் காரணம் யாது? சிக்கனம்! சிக்கனம்!! 'சிக்கனம் இருந்தால், யாரும் செல்வராக முடியும்' என்ற ஜான்சனின் பொன்மொழி என்றும் நம் மனத்தில் பதிந்திருக்கத் தக்கது. இது நிற்க,

இன்று நம் இந்திய நாடு பொருளாதார நெருக்கடியால் மிகவும் அல்லலுறுகின்றது. நம் நாடு செழிப்புற்றுப் பல்வகையிலும் பண்புற்றுப் பண்டைப் பணப் பெருமையைப் பெறவேண்டுமாயின், அதன் மக்களான நாம் மிகவும் சிக்கனத்தோடு வாழ்க்கையை நடத்த வேண்டும்; வீணை செலவை அடியோடு அகற்றவேண்டும்; இன்றியமையாச் செலவு செய்ய வேண்டுவதே. ஒவ்வொருவரும் 'நாளை நம் நிலை யாதாகும்?' என்னும் வினாவைக் கேட்டு, விடை காணல் வேண்டும். இருப்பதை இன்றைக்குச் செலவிட்டு விடின், நாளைக்கு அளிப்பவர் யாவர்? 'செயலற்றுச் சம்பாதிக்க வகையற்ற நிலையில் நமக்கெனப் பொருள் இருக்கவேண்டுமே! வருவதைச் செலவிட்டு விடின், பின்னர் நம் கதி யாதாகும்?' என்பதை இப்பொழுதே ஊன்றி யோசித்துச் சிக்கனமாக வாழ்ந்து, கையிருப்புடன் இருத்தலே வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும்; மன மகிழ்ச்சியை உண்டாக்கும்.

ஆதலின், அன்புள்ள பிள்ளைகளே, உங்களுக்குக் கிடைக்கும் சிறிய செப்புக் காசையும் வீண் செலவு செய்யாமல், கெட்டியாய் முடிப்பிட்டு வையுங்கள். நீங்

கள் பெரியவர்களாகிச் சம்பாதிக்கும் நிலையிலும் சிக்கனத்தை மறவாமல், அதன் ஏற்றத்தை நினைந்து நினைந்து, சிக்கன வாழ்வு நடத்துங்கள். நீங்கள் மனக் கவலையின்றிச் சுக வாழ்வு வாழ இறைவர் இன்னருள் புரிவார்; நமது தாய் நாடும் செழிப்புறும்.

## 8. புத்தகம் அளிக்கும் புத்துயிர்

1. கவி நிறைந்த நூல் இன்ப மயமன்றோ!

—உமார்காயம்

2. எனக்கு இன்பமளிக்கும் நண்பர்களென்றே நூல்களைக் கூறுவேன்.

—மாண்டேய்ன்

3. நூல், சென்ற கால உலகிற்கும் ஏனைய உலகங்கட்கும் நம்மைத் தூக்கிச் செல்லுமொரு மாயக் கருவி என்னலாம்.

—அனடோல் பிரான்ஸ்

நூல் நிலையம் இல்லாச் சபையோ ஊரோ கண்ணில்லா வதனம் போலப் பொலிவற்று இருக்கும். அறிவைப் பெருக்கும் நூல்கள் நிறைந்த நூல் நிலையம் மனத்தையும் அறிவையும் ஒருவழிப்படுத்தும் இன்பப் பூங்காவாகும்.

தாழ்ந்த நிலையற்ற குணங்கள் நம் மனத்தினின்றும் மறைய வேண்டுமாயின், நம் மனம் அன்புக்களஞகி மலர வேண்டுமாயின், நாம் அறிவு நூல்கள் நிறைந்த நூல் நிலையத்துள் நுழைதல் வேண்டும்; நுழைந்து, தலை நிமிர்ந்து நூல்களை நோக்கல் வேண்டும்; நமக்கு இதம் அளிக்கும் இனிய நூல்களை எடுத்து மனத்தை

ஒருவழிப்படுத்திப் படித்து இன்புறல் வேண்டும். அந் நிலையிற்றான் நமது அறிவு பரந்த நிலையை அடையும்.

மாண்டேய்ன் என்னும் பெரியார், 'எனது கிழப் பருவத்திலும், நான் தனித்திருக்குங் காலங்களிலும் நூல்கள் எனக்கு இன்பம் அளிக்கின்றன. அவை, எனது வாழ்க்கையாகிய பிரயாணத்தில் எனக்கு இத மளிக்குங் கட்டுச் சோறாகப் பயன்படுகின்றன,' எனப் புகன்றுள்ளார்.

இங்ஙனம் எல்லா நாட்டுப் பெரியார்களும் நூல் களின் அளவற்ற பெருமையினையும், அவை நிறைந் துள்ள நூல் நிலையச் சிறப்பினையும் நன்கு கூறியுள்ளார் கள். நல்ல வாழ்க்கையை நடத்த நமது சொந்த அறி வும் அறிஞர் போதனையும் அவசியமாகும். நாம் நமது அறிவை வளர்க்கப் பல நூல்களைப் படிக்க வேண்டும்; அறிஞர்தம் அறிவு மொழிகளைக் கேட்க வேண்டும். இவ்விரு விதத்திலும் பெறும் அறிவாற்றான் நமது அனுபவம் முதிர்ச்சி பெறும்; எண்ணங்கள் பலப்படும். ஆதலின், ஒவ்வொருவரும் நூல் நிலயத்தில் உள்ள சிறந்த நூல்களைக் கற்றுத் தம் அறிவைப் பெருக்க வேண்டும். நிறைந்த அறிவே சன்மார்க்கத்துக்கு வழி காட்டியாகும்.

ஆதலின், நூல் நிலையம் உண்மைக்கு உறைவிட மான அரண்மனை என்பதில் ஐயமில்லை. அங்கு மனி தன் தன்னைத் தானே சந்திக்கின்றான். அங்கு அவன் உலக முன்னேற்றத்தையும் இருள் கவிந்து ஒளிபெற்ற மக்களின் வாழ்க்கை வரலாறுகளையும், உலகில் நடை பெறும் பிற சம்பவங்களையும் தெள்ளிதில் அறிகின்

றான்; புகழுக்கு முன் ஒருவன் வாழ்க்கையில் அடைய வேண்டும் துன்பக் கவலைகளையும் வாழ்க்கைப் போரில் மனிதன் எவ்வளவு துணிவுடன் இருக்க வேண்டுமென் பதையும் உணர்கின்றான். மேலும், பல நாட்டு மக்க ளின் நாகரிகம், மத வளர்ச்சி, பழக்க வழக்கங்கள் முத லாயவற்றை அறிவதாலும் அவன் மனம் விரிவடைகின் றது. இங்ஙனம் உலக அறிவை உண்டாக்கி, அவனைப் பெரிய ஒரு சீர்திருத்தக்காரனாகவும் அறிஞனாகவும் செய்வன நூல் நிலையத்துள் நிறைந்துள்ள நூல்களே ஆகும்.

ஆகவே, நமக்கு உலக அறிவையும், பொருள் தேடும் வழியினையும், ஒழுக்கத்தையும் அறிவுறுத்தும் இன்ப மயமான நூல்கள் உள்ள நூல் நிலையங்கள் நம் தாய் நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் இருத்தல் வேண் டும். விவசாய சம்பந்தமான நூல்களும், தொழில் சம்பந்தமான நூல்களும், அரசியல் சம்பந்தமான நூல் களும், உலக முன்னேற்றத்துக்குரிய நூல்களும் ஒழுக்க மேம்பாட்டுக்குரிய நூல்களும் நூல் நிலையத்தில் நிறைந்து பொலிவுறல் வேண்டும். மக்கள் அவற்றைப் படித்துப் பயன் பெறுதல் வேண்டும். இந்நிலை எய்திய தாயின், நம்மவர் கல்வியறிவு வாய்க்கப் பெறுவர்; நம் நாடும் எளிதில் மேனாடுகளைப் போல முன்னேற்ற அணி யில் தலைநிமிர்ந்து நிற்கக் கூடும்.

# 9. சரியான தொடக்கங்கள்

1. ஒவ்வொரு மணியிலும் ஆரம்பித்து முடியும் எல்லாச் சாதாரணச் சம்பவங்களும் பிறவும் நம்மை மேலே கொண்டு போகத் தக்கவையே. ஆனால், தொடக்கம் சரியானதாயிருத்தல் வேண்டும்.

—லாங் பெல்லோ

2. ஓர் ஆரம்ப உணர்ச்சியின் தன்மையே அதன் பலன்களின் தன்மையை எப்போதும் ஏற்படுத்தும்.

—ஜேம்ஸ் ஆலன்

ஆரம்பம் அல்லது தொடக்கம் என்பது ஒரு காரணமே. ஆதலால், அதன் காரியம் அதைத் தொடரும். அக்காரியம் காரணத்தின் நிலையையே பெற்றிருக்கும். ஓர் ஆரம்பம் ஒரு முடிவை முன்னதாகவே காட்டும். ஆரம்பம் நல்லதாயிருப்பின், முடிவு நல்லதாகும்; ஆரம்பம் தீயதாயிருப்பின், முடிவும் தீயதாகவே இருக்கும். ஆதலின், ஆரம்பம் எப்போதும் நல்லதாய் இருக்க வேண்டும்.

ஆரம்பம் முதலில் மிகச் சிறிய அளவினதாய் இருக்கலாம்; ஆனால், முடிவு மிகப் பெரிய அளவினதாயேற்படும். பெரிய ஆறு முதலில் ஒரு சிறிய அருவியாகவன்றோ ஆரம்பிக்கிறது? அது வரவரப் பெரிதாகி உயர் நிலையை அடைகின்றது. புயல்காற்றுக்கும் அசையாத ஆலமரம் ஒரு சிறிய விதையினின்றும் தோன்றியதன்றோ? ஒரு சிறிய நெருப்புக் குச்சி நகரத்தையே அழிக்கக் கூடியதாகிறது. தூய எண்ணம் ஒன்று உலகத்தையே தூய்மைப்படுத்துவதை நாம் காணலாம்.

புத்த மகானிடம் தோன்றிய ஜீவகாருண்ய உணர்ச்சி உலகெலாம் பரவி உலகத்துக்கே புத்துயிர் அளித்த தன்றோ? இயேசுநாதரிடம் தோன்றிய அன்பு நெறி இன்று உலகெலாம் பரவி நிலைத்துள்ளதன்றோ? இங்ஙனமே ஓர் இடத்தில் தோன்றும் ஆரம்பம் மிகப் பெரிதாகப் பரவுதலும் பெரிய பயனைத் தருதலும் இயல்பு. ஆதலின், தொடக்கம் சரியானதாயிருந்தால், தொடங்குபவன் மிக்க நன்மை பெறுவான்.

நீ உன் நிலைக்கு உட்பட்ட தொடக்கங்களைத் தொடங்க வேண்டும். அவை உன் சொந்த எண்ணங்களிலும் செயல்களிலும் இருப்பவை. உன்னுடைய தொடக்கங்கள் செம்மையானவையா என்பதை முதலில் கவனி. ஆரம்பித்த பின்னர், அவற்றின் பயன்களைப் பொறுமையோடு சகித்திருந்து வருவையானால், நீ இறுதியில் வெற்றி வீரனாய் விளங்குவாய். சுருக்கக்கூறின், உனது வாழ்க்கையின் வெற்றி உனது தொடக்கத்தைப் பொறுத்துள்ளது.

உனது வாழ்க்கையாகிய மாளிகை நீ ஒவ்வொரு நாளையும் தொடங்கும் விதம் என்னும் அஸ்திவாரத்தின் மீதே கட்டப்படும். அஸ்திவாரம் பலமுள்ளதாக இருந்தால் அன்றோ மாளிகை நெடுநாள் இருக்கும்? அங்ஙனே உனது தொடக்கம் சரியானதாயிருப்பின், வாழ்க்கை மேம்படும்; உலகில் நீ சுக புருஷனாக விளங்குவாய்.

நீ ஒவ்வொரு நாளையும் எப்படித் தொடங்குகிறாய்? படுக்கையை விட்டு எழுகையில் என்ன

யோசனையோடு எழுகின்றாய்? உன்புதியநாளில் நீ செய்யும் முதல் வேலை என்ன? இக்கேள்விகளுக்கு நீ என்ன பதில் அளிப்பாய்?

காலையில் எழுந்திருத்தலே உனது வாழ்க்கை செம்மைப்படுவதற்கு அறிகுறியாகும். வேலை இருப்பினும் இல்லாவிடினும் ஒவ்வொருநாளும் காலையில் எழுதலையே நீ கடமையாகக் கொள்ளல் வேண்டும். படுக்கையில் நீண்டநேரம் இருப்பது பலஹீனத்துக்கும் பல நோய்களுக்கும் காரணமாகும். காலையில் எழுந்து குளிர்ந்த காற்றோட்டமுள்ள சாலை வழியே நடந்து செல்; உயிர்கள் ஒருநாளை ஆரம்பிக்கும் விதங்களை நீ காண்பாய்; இயற்கையின் அதிகாலைத் தோற்றம் உன் பார்வையைக் கவர்ந்து மகிழ்ச்சியை ஊட்டும். அப்போது உன் மனம் கள்ளங் கபடற்றுப் பளிங்குக் கண்ணாடியைப் போன்று தூயதாயிருக்கும். அந்நிலையில் உன் முழு எண்ணமும் இறைவன்பால் நாடும்: ஆகவே, உன் ஒரு நாளைய ஆரம்பம் இறைவனிடத்தினின்றும் தொடங்குவதாகும். இப்பழக்கம் நாளும் உனக்கு இருக்குமாயின், நீ, வாழ்க்கை இன்பத்தை எளிதில் நுகரமுடியும். காலை நடையாற்றான் இடைவிடாது யோசிக்கச் சக்தியைப் பெற்று, வாழ்க்கையில் உள்ள சிக்கலான விஷயங்களை உணர்ந்து, உன்னைப் பற்றியும் உன் விவகாரங்களைப்பற்றியும் தெளிவாக அறியும் சக்தியைப் பெறுவாய். உன் வாழ்க்கை நீடிக்கச் செய்யத் தக்க உடற் பயிற்சி, மனப் பயிற்சி இரண்டும் அதிகாலையிற்றான் செய்யத் தக்கவை என்பதையும் மறவாதே.

ஆதலின், அன்புள்ள மகனே, நீ உலகத்தில் நன்னிலையை அடைந்து வாழ வேண்டுமானால், உன் தொடக்கங்கள் சரியானவையாக இருத்தல் வேண்டும். அவற்றைச் சரி செய்வது—அதிகாலையில் எழுந்து, இயற்கையின் இடையில் நடத்தலே என்பதை உணர்வாயாக.

---

## 10. பாண்டித்துரைத்தேவர்

1. *தமிழ் மொழியை நான்காம் தமிழ்ச் சங்க வாயிலாக மிகச் செழிப்புறச் செய்த வள்ளல் பாண்டித்துரைத் தேவரே ஆவர்.*

**டாக்டர் உ. வே. சாமிநாதையர்**

2. *முதல் மூன்று சங்கங்களைப்பற்றிய நினைவுகளை எழச் செய்து தமிழமுதினை ஊட்டத் தோன்றிய நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்துத் தந்நலமற்றுத் தமிழுக்குழைத்த வள்ளல் அல்லவோ பாண்டித்துரைத் தேவர் !*

**—மறைமலை அடிகள்**

உலகம் தோன்றியதுமுதல் இற்றைநாள் வரையில் கோடிக் கணக்கான மக்கள் பிறந்து இறந்தொழிந்தார்கள். அவர்களைப்பற்றி யாவரும் கவலைகொள்வதில்லை. எனினும், அவர்களுள் உயிர்கள் பொருட்டு அருந்தொண்டாற்றித் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் துறந்த உத்தமர்களின் பெயர்கள் பசுமரத்தாணி போல மக்கள் மனத்தே உலகம் உள்ளளவும் பதிந்து கிடக்கின்றன. அல்லும் பகலும் பொதுமக்கள் நன்மைக்கு உழைத்து மறைந்த பெரியார்களுள், திரு. பாண்டித்துரைத் தேவர் ஒருவராவர்.

தேவர் கி. பி. 1864-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ஆந் தேதி தமிழ்ப் புலவரும் பெரிய சமீன்தாரு மான பொன்னுச்சாமித் தேவரின் மூன்றும் புதல்வ ராகப் பிறந்தார். ஐந்து வயதானதும், தேவர் அக் காலத்திய சேது சமஸ்தானப் புலவரான முத்துசாமி ஐயங்காரிடம் தமிழைக் கற்றுப் பதினறு வயதிற்குள் எல்லாத் தமிழ் நூல்களையும் படித்துச் சிறந்த புலவ ரானர். அவர் சொற்பொழிவு நிகழ்த்துவதிலும் செய் யுட்கள் செய்வதிலும் மிகச் சமர்த்தராக விளங்கினர். சைவ சித்தாந்த—பிற மத சம்பந்தமான—நூல்களிலும் மிக்க தேர்ச்சியுற்றுக் கற்றோர்க்கேயன்றிக் கல்லார்க் கும் களிப்புண்டாக்கவல்ல சொல்லாற்றல் படைத்து விளங்கினர்.

தமிழ் நூல்கள் யாவற்றையும் கற்றமையால், தமிழ் நாட்டில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்த நிலையை யும்—அவற்றில் இருந்த புலவர் பெருமக்களின் நிலை யையும்—தற்போது தமிழ் சீர்கேடடைந்து, புலவர் ஆதரிப்பாரற்றுத் தவித்தலையும் உணர்ந்த தேவர், பல ஆண்டுகள் முயன்று, தம் பொருளைச் செலவிட்டு மது ரையில் ஒரு பெருங் கட்டடத்தைக் கட்டுவித்து, அதில் 1901-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆந் தேதி நான்காம் தமிழ்ச் சங்கம் என்றொரு சங்கத்தை நிறுவித் தாம் அதன் தலைவராக அமர்ந்தார்.

தேவர், தாம் தாபித்தசங்கம் என்றென்றும்நிலைத்து நிற்றற்கு ஏற்றவாறு மூலதனம் திரட்டி, எக்காரணத் தைக்கொண்டும் இம்மூலதனம் வீணுகாதவாறு அதற்

குற்ற முறைகளைச் செய்தார். முற்காலப் பாண்டி மன்னரால் எங்ஙனம் சங்கம் நிறுவித் தமிழ் வளர்க்கப் பெற்று வந்ததோ, அங்ஙனமே தேவரும் தம் சங்கத்தை நிறுவி, அதில் புலமை வாய்ந்த பெரும் புலவர்களை நியமித்தார்; தமிழ்ச் சங்க அச்சியந்திரசாலை, தமிழ்ச்சங்கப் புத்தகாலயம், தமிழ்ச் சங்கப் பத்திரிகாலயம், செந்தமிழ்க் கலாசாலை என நான்கு பிரிவுகளை உண்டாக்கிப் பழந் தமிழ் நூல்களை நவீன ஆராய்ச்சியுடன் சுத்தமாக அச்சிட்டு வெளிப்படுத்தவும், தமிழ் நூல்களைச் செலவின்றி யாவரும் படித்துணருமாறும் செய்வித்தார்; தமிழ் நிலை, பண்டைக் காலத் தமிழ் மக்கள் நாகரிகம் இன்னவற்றை மாதந்தோறும் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்த ஏற்பாடு செய்தார்; மாணவர்க்கு உணவளித்துப் பாடம் கற்பிக்கவும் சங்கத்தில் தக்க முறைகளைக் கையாண்டார்.

தமிழ்ச் சங்கத்தில் பிரவேசம், பால பண்டிதம், பண்டிதம் என மூன்று பிரிவுகளை ஏற்படுத்தி, தமிழ் மாணவர்க்குத் தமிழ்க் கல்வி போதிக்கப்பட்டுவர ஏற்பாடு செய்தவர் தேவரே யாவர். இப் பரீட்சைகள் இன்றும் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் முதன்மையாகத் தேறுபவர் சிறந்த பரிசிலைப் பெறுகின்றனர். இத்தகைய பரிசிலை மூன்று பரீட்சைகளிலும் முதன் முதல் பெற்றவர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் என்னும் பெரியார் ஆவர். சங்கத்திலிருந்து வெளியாகும் பத்திரிகையின் பெயர் 'செந்தமிழ்' எனப்படும்.

தேவர், இராமநாதபுரத்தில் ஆங்கிலக் கலாசாலை ஒன்றைத் தாபித்துத் தமது பொருட் செலவில் நடத்தி

வந்தார். அஃது இப்போது இராமநாதபுரம் இராஜா அவர்களால் உயர்தரக் கலாசாலையாக நடத்தப் பெற்று வருகிறது.

மொழிக்கென உழைத்ததே அன்றித் தேவர் நாட்டு முன்னேற்றத்திலும் பேரூக்கம் காட்டி வந்தார். மக்களிடையே சமத்துவம், சகோதரத்வம், தியாக சிந்தை முதலியன வளர்ந்தோங்குமாறு பல அரிய சொற்பொழிவுகள் ஆங்காங்கு நடத்தினர்.

பல நூற்றாண்டுகளாக ஏடுகளில் அடங்கிக் கிடந்த அரிய வரலாறுகள்—பழந் தமிழ் நூல்கள் புத்தக வடிவில் வரப் பொருளுதவி செய்த பெரு வள்ளல் பாண்டித்துரைத் தேவரே ஆவர். அவரும் சில நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்துளர். இன்று தமிழ்மொழி தமிழ்நாட்டில் சிறிதேனும் சிறப்புற்று இருப்பதற்குக் காரணபூதர் தேவரே என்று சிறிதும் தயங்காமற் கூறலாம். இப் பெரியார் தமிழ்ச் சங்கத்தைத் தாபித்த சிறிது காலத்திற்குள் உலக வாழ்வை நீத்தமையால், தமிழ் மொழிக்குத் தக்க தொண்டு செய்யக்கூட வில்லை என்பதை வருத்தத்துடன் அறிவிக்க வேண்டுவதாயுள்ளது.

தமிழ் மொழிக்குப் புத்துயிர் அளித்துத் தமிழ் மக்கள் சிறிதேனும் தலை நிமிருமாறு செய்த பெரியாரான பாண்டித்துரைத் தேவரைத் தமிழ் உலகம் என்றும் மறவாது! மறவாது!!

# 11 மனச்சாட்சி

1. நன்மை தீமைகளை வேறுபாடு தோன்றப் பகுத்துக் கூறும் உள்ளுணர்ச்சியே மனச்சாட்சி என்பது.

—விவேகானந்த அடிகள்

2. மனச்சாட்சி வகுத்துரைக்கும் வழியே நடப்பவன் முடிவற்ற இன்ப நிலையை அடைவான்.

—ஜான் ரஸ்கின்

இயற்கையாக ஒவ்வோர் உயிரினிடத்தும் அமைந்துள்ள அறிவுக்கு மனச்சாடசி அல்லது உள்ளொளி என்பது பெயர். அஃது எப்போதும் நன்மையை அறிவுறுத்திக்கொண்டேயிருக்குமாதலின், அதனைத் தெய்வ வாக்கு என்பதும் பொருந்தும். பிறப்பு இறப்பு என்னும் இருள் மிக்க அரணியத்தில் அலையும் ஒருவனுக்குப் பேரொளியாய் இருப்பது அம்மனச்சாட்சியே. ஒவ்வொரு கணமும் அவனது நன்மையிலேயே அது நாட்டமுடையது. ஆ! ஒவ்வொருவனும் அதன் சொற்படி நடப்பானாயின், அவன் எவ்வளவு பேரின்பத்தை நுகரக் கூடும்!

அரசன் முதல் ஆண்டி ஈறுகவுள்ள உயர்திணைப் பொருள்களிடம் உள்ளொளியாய்த் திகழும் மனச்சாட்சியின் வண்ணம் ஒவ்வொருவரும் நடக்க வேண்டுவது அவசியமாகும். ஆனால், மக்களிற் பெரும்பாலார் மனச் சாட்சியின் போதனைப்படி நடவாமல், அதற்கு நேர்மாறான பாப சக்தியின் வலையில் சிக்குண்டு மயங்குகின்றனர். அப்பாப சக்தியும் மனிதன் இயல்பில்

அமைந்துள்ளது. அஃது அவனை மனம் போன போக்கெல்லாம் போகுமாறு தூண்டும்; அழியுந் தன்மை வாய்ந்த இப் பொய்யுலகப் போகங்களை நாடுமாறு செய்யும். இத்தகைய நாட்டத்தால் அவன் சுக போகங்களில் ஈடுபட்டுக் கடவுளை எண்ணுக் கயவனுகின்ருன். அந்நிலையில் அவனுள் இருந்து பேரொளியாய்த் திகழும் மனச்சாட்சி வலியிழந்து நிற்கும்.

நமது மனச்சாட்சியை இத்தகைய களங்கம் சேராமற் காத்து, அஃது எக்காலத்தும் தூய்மையும் தெய்வத் தன்மையும் பொருந்தி இருக்குமாறு செய்ய வேண்டும்; அதனைக் கல்வி கேள்விகளால் பலம் பொருந்தியதாகச் செய்ய வேண்டும். ஒளி ஆதலின், அஃது எப்போதும் எரியுமாறு செய்தல் வேண்டும்; இங்ஙனம் அதனை வலி பெறச் செய்வோமாயின், வலி பெற்ற அதன் சொற் கேட்டு நாம் நடப்போமாயின், இவ்வுலகமே நம்மடி வணங்கும். இதில் வியப்பொன்றும் இல்லை.

நன்மை—தீமைகளையும், மெய்—பொய்களையும் உள்ளவாறு பகுத்தறிந்து, தீமையைக் களைந்து நன்மையிலும், பொய்யை ஒழித்து மெய்யிலும் செயல் புரியுமாறும் பேசுமாறும் இயக்குகின்ற அறிஞர்போன்ற மனச்சாட்சி உள்ளத்தே இயற்கையாக அமைந்து இருக்கையில், அதைக் கவனியாததால்—அதன் சொற் கேட்டு நடவாததால்—அல்லவோ, அந்தோ! உலகத்தில் கணக்கற்ற கொலைகள், கொடுமைகள், மாபெரும் போர்கள் முதலாயவை நடக்கின்றன! ஒவ்வொரு மதமும், மத போதகரும் இப்பொன்னெளியைக் காட்டிச்

சென்றும் பயன் யாது? அவர்கள் பொன் மொழியைப் பின்பற்றி நடப்பவரை உலகில் காண்பது அரிதாய்விட்டது. உலக மக்கள் மதபோதகர்களைத் தெய்வமாகக் கருதியோ—அவர்களுடைய போதனைகள் அரியவை என்று பாராட்டியோ—வீண் காலங் கழிக்கிறார்களே அன்றி, அவர்கள் கூறிச் சென்ற வண்ணம் நடக்கிறார்களில்லை. இத்தகையோர் தம்மதத்தையோ—போதகரையோ பெருமைப்படுத்திப் பேசி நிற்பதாற் பயன் என்?

மனச்சாட்சி வலிவடைதல் வேண்டும். அஃது அறிவைத் தன் வசப்படுத்தல் வேண்டும். அஃதாவது அறிவு மனச்சாட்சியின் சொற்கேட்டுப் பணிந்து நடக்க வேண்டும். அறிவு, பரிபூரணப் பக்குவத்தை அடைந்திருந்தாற்றான் அது மனச்சாட்சியின் சொற்கேட்கும். ஆதலின், நாம் முதலில் அறிவை நிறைவாக்க வேண்டும்; அதற்குரிய அரிய நூல்களையும், மனவமைதி பெற்ற உலகப் பெரியார்களின் வரலாறுகள் அடங்கிய நூல்களையும் கற்றுத் தேறவேண்டும்; செந்நெறி நடக்கும் செம்மையராதல் வேண்டும். இந்நிலையிற்றான் அறிவு பூரணப் பக்குவம் அடையும்; மனச்சாட்சியின் சொற்கேட்டுச் செவ்வனே நடக்கும். நாம் ஒப்பற்ற உயரிய இன்பத்தைப் பெறலாம்.

நாம் இத்தகைய பெரு நன்மையைப் பெறவே, நம்மைப் பிரார்த்தனை செய்யுமாறு மதபோதகரும் மறை நூல்களும் அறிவுறுத்துகின்றன. பிரார்த்தனையால் நாம் மனச் சாந்தியை யடைந்து உள்ளொளியைக் காணலாம்.

நமது மனச்சாட்சி, நம்மை எவ்வுயிரிடத்தும் அன்பாய் இருக்குமாறு தூண்டுகிறது; உயிர்கட்கு நன்மை புரியுமாறு வேண்டுகிறது. அதன் சொற்படி பெரியோர் நடந்ததாற்றான், ஒப்பிலாப் புகழ் பெற்று விளங்கினர். நாமும் மனச்சாட்சியின் அறிவுறுத்தலின்படி நடப்போமாயின், எய்துவது ஆனந்த நிலையே.

---

## 12. கிராமச் சீர்திருத்தம்

1. இந்தியாவின் வறுமை ஒழிய வேண்டுமாயின், கிராமச் சீர்திருத்தம் வேண்டும்.

—**காந்தியடிகள்**

2. கிராம முன்னேற்றமே நாட்டு முன்னேற்றத்துக்கு அடிப்படையாகும்.

—**சர். விஸ்வேஸ்வரையா**

நம் தாய்நாடாகிய இந்தியா விவசாயத்தொழில் நிறைந்த நாடு. பட்டணங்களில் உள்ள இலட்சக் கணக்கான மக்களைத் தவிர ஏனைய கோடிக் கணக்கான மக்கள் விவசாயிகளாவர். அவர்கள் எல்லோரும் கிராமங்களில் வசிப்பவர்கள். நமது நாட்டில் உள்ளவை சுமார் ஐந்து லட்சம் கிராமங்கள்; அவற்றில் வசிப்போர் தொகை, சுமார் இருபற்தெட்டுக் கோடியாகும், இவர்கள் யாவரும் விவசாயிகளே. எனவே, நம் நாட்டு முன்னேற்றம் கிராமங்களையும் விவசாயிகளையும் பொறுத்துள்ளது என்பது வெள்ளிடை மலை.

ஆகவே, நமது நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமாயின், கிராமங்கள் சீர்திருத்தம் அடைய

வேண்டும்; கிராமவாசிகள் கல்வியறிவு வாய்ந்தவர்களாய் விவசாயத்தை நன்னிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

கிராமங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்க வசதிகள் போதிய அளவு இல்லை. ஏதோ ஆங்காங்கு வைக்கப் பெற்றுள்ள ஆரம்பப் பள்ளிகளில் ஒரு சிலர் கற்கின்றனர். எனினும், அக்கல்வி, கடன் வாங்கும் பத்திரங்களில் கையெழுத்துப் போட மட்டும் உதவுகின்றதே யன்றிப் புத்தக அறிவைப் பெரிய அளவில் ஊட்டுவதாயில்லை. இதற்குக் காரணம் கிராம ஆரம்பப் பள்ளி ஆசிரியர் நிலையையும், கற்போர் திறனையும், அவர் தம் ஓய்வின்மையையும், பாடமாக வைத்திருக்கும் நூல்களையும் பொறுத்துள்ளது. இப்போதுள்ள கிராமக் கல்வியால் சிறந்த நன்மை அடைவதற்கில்லை. விவசாயிகளும் கற்பதில் ஆர்வமின்றிக் கிணற்றுத் தவளைகளையொப்ப, உலக நிகழ்ச்சிகளையும், முற்போக்கையும் விவசாய முன்னேற்றத்தையும் கவனியாமல், காலை முதல் மாலை வரை கண்மூடித்தனமாக உழைக்கின்றார்களே தவிர, பெரும் பயன் பெற்றார்களுமில்லை. இவர்கள் நிலையை நினைக்க நினைக்க நாம் வருந்தாமல் இருக்கக்கூடவில்லை. இவர்கள் இம்மூட உலகில் இருக்கும்வரை நம் நாடு முன்னேறுவது எங்ஙனம்? நாட்டு முன்னேற்றத்துக்குக் காரண பூதர்களான இவ்விவசாயிகளை எங்ஙனம் உயிர் நிலைக்குக் கொண்டுவருவது?

நாட்டு முன்னேற்றத்தில் மிகப் பற்றுடைய கல்வி கற்ற இளைஞரையே கிராமச் சீர்திருத்தம் செய்ய அனுப்ப வேண்டும். அவர்கள் ஒவ்வொருவ

ராக ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று, அங்குச் சிறிது காலம் விவசாயிகளோடு வாழ வேண்டும்; ஆரம்பக் கல்வி கற்பதால் உண்டாகும் பல நன்மைகளை அவர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும்; மேனாடுகளில் விவசாயம் எவ்வாறு முன்னேறிக்கொண்டு வருகிறது—மேனாட்டு விவசாயிகள் தங்கள் உழவுத் தொழிலை எங்ஙனம் செல்வமாக மதிக்கிறார்கள்—நம் விவசாயிகள் அவர்களை எங்ஙனம் பின் பற்றி உழு தொழிலைச் சீர்படுத்தக் கூடும்—என்பன போன்ற அரிய விஷயங்களை விவசாயிகட்குப் பலகாலும் நன் முறையில் தெளிவாக எடுத்துக் கூற வேண்டும்; பல நாட்டு விவசாய நூல்களைப் படிப்பதால் உண்டாகும் நன்மைகளைக் கூறி, அக் கிராமத்தில் விவசாயம், கைத்தொழில், மதம், அறிவு வளர்ச்சி இன்னவை பற்றிப் பேசும் அரிய நூல்களை வரவழைத்துப் புத்தக சாலை ஏற்படுத்துதல் வேண்டும்; மேலும், கிராமங்களை எங்ஙனம் சுத்தமாக வைத்திருக்கக் கூடும்—விவசாயிகள் சுகாதார முறைகளைப் பின் பற்றி நடக்கும் முறை—என்னும் விஷயங்களையும் விளக்கமாகக் கூறிப் பிரசாரம் செய்பவர் செய்கையில் நடத்திக் காட்டவேண்டும்; கைத்தொழில் மேனாடுகளில் எவ்வாறு முன்னேற்றமடைந்து வருகிறது—நம் கைத்தொழில்களான நூல் நூற்றல், நெசவு நெய்தல், பாத்திரங்கள் செய்தல், மரச் சாமான்கள் செய்தல் முதலானவற்றை எங்ஙனம் முன்னேறச் செய்தல்—என்பனவற்றைத் தெளிவாகப் போதித்துக் கிராம வாசிகட்குள்ள ஓய்வு நேரங்களில் கைத்தொழிலைச்



மஹாமஹோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

செய்யுமாறு தூண்ட வேண்டும். பத்துக் கிராமங்களுக்கு ஒரு படக்காட்சிக் கொட்டகை வீதம் கட்டி, வாரத்திற்கு இரு முறை அல்லது ஒரு முறை மேனாட்டுக் கல்வி நிலை—விவசாயம்—கைத்தொழில் இவற்றைப்பற்றி இயங்குபடங்களைக் காட்டச் செய்தல் வேண்டும். ஏனைய நாட்களில் சன்மார்க்கப் பிரசங்கங்களும், நாடகங்களும் நடத்துதல் வேண்டும்.

இத்தகைய முன்னேற்றத் துறைகளைச் செல்வர்களும் அரசாங்கத்தாரும் ஒத்துழைத்துக் கிராமங்களிற் புகுத்துவார்களே ஆனால், சில ஆண்டுகளுக்குள் நம் நாட்டுக் கிராமங்கள் மேனாட்டுக் கிராமங்களாகும். விவசாயிகள் அறிவைப்பெற்று மேனாட்டு விவசாயிகளை ஒப்பர். விவசாயமும், கைத்தொழிலும், அறிவும் பெருகப் பெருக, ஆ! நம் நாடு—இன்று வறுமையுற்று வாடும் நம் தாய்நாடு—பூலோக சுவர்க்கமாக விளங்காதோ? கூறுங்கள்.

---

## 13. தமிழ் வளர்த்த தனிப் பேராசிரியர்

தென்னாடு ஒருங்கே புகழும் பெருமை வாய்ந்த மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தமிழை வளர்த்த பெரியாராவர். இவர் மொழிப்பற்று மிக்குடையவர். இவர் கும்பகோணத்துக்கு மேற்கே பத்து மைல் தூரத்திலுள்ள உத்தமதானபுரம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் தகப்பனாரான திரு. வேங்கட சுப்பையர் சிறந்த சிவ பக்தர்.

ஒழுக்கத்திற் சிறந்த வேங்கட சுப்பையரின் அருஞ் செல்வரான சாமிநாதையர் சிறு வயதி லிருந்தே ஊக்கமும் உழைப்பும் ஒழுக்கமும் உடைய வராய் விளங்கினர்; ஒரு சில தமிழ்ப் புலவர்களிடம் சில தமிழ் நூல்களைப் பாடங் கேட்டனர்; தந்தையா ரிடமும் வேருெருவரிடமும் சங்கீதங் கற்று வந்தனர்.

ஐயருக்குத் தமிழில் இருந்த அளவிலாப் பற்றைக் கண்ட தந்தையார், அவரை, அக்காலத்தில் தென்னுட்டு மஹா வித்துவானுக விளங்கிய திரிசிரபுரம் மீனுக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் நூல்களைப் பயில விட்டார். தமிழ்மொழியும் தமிழரும் செய்த பேறே ஐயரைப் பிள்ளையவர்களிடம் கொண்டு சேர்த்தது என்னல் மிகையாகாது.

ஐயர், பிள்ளையவர்களைத் தெய்வமாகக் கருதி வழிபட்டுத் தமிழ் நூல்களைக் கற்கலானர். பிள்ளை யவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்துவானுதலின், அவர்கள் அடிக்கடி அங்குச் செல்வதுண்டு. அவர்க ளைத் தொடர்ந்து ஐயரும் சென்று, பண்டார சந்நிதி யான ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அன்புக்குப் பாத்திரரானர். பிள்ளையவர்கள் மடத்திலேயே தங்கியிருந்த காலத்திலும் ஐயர் அவ்விடத்திலேயே இருந்து அவர்களிடம் பல நூல்களைக் கற்றுத் தேறி னர்.

பின்னர்ப் பிள்ளையவர்கள் காலமானர்கள். அவ் வமயம் ஐயர் அடைந்த துயரம் அளவிடற்கரிது. எனினும், சுப்பிரமணிய தேசிகர் தேற்றத் தேறி, அவர் விருப்பப்படி மடத்திலேயே தங்கியிருந்து

அங்குப் படித்து வந்தோர்க்குப் பாடங் கற்பித்து வந்தனர். நிற்க,

பிள்ளையவர்களின் முதல் மாணவரான தியாகராஜ செட்டியார் அக்காலத்தில் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். அவர் வயது முதிர்ச்சியால் வேலையை விடத் துணிந்து, தம் வேலைக்கு நம் ஐயரையே தக்கவரெனத் தேர்ந்தெடுத்தார். எனவே, ஐயர் 1880-ஆம் ஆண்டு, ஏறக்குறைய தமது இருபத்தைந்தாம் வயதில் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவியில் அமர்ந்தார்.

அது முதல் 1903-ஆம் ஆண்டு வரை (23 வருடகாலம்) ஐயர் அக் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். இவ்விருபத்து மூன்று வருடகாலம் தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்படல் வேண்டும். ஏனெனில், ஐயர் ஆற்றிய தமிழ்த் தொண்டு இக்காலத்திற்றான் என்க. தமிழ்ப் பெருங் காப்பியங்களான சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன இக்காலத்திலேயே புத்தகரூபத்தில் வெளிவந்தன. இம்முயற்சியில் ஐயர் பட்ட இன்னல்கள் மிகப் பல. ஏட்டுப் பிரதிகளைச் சேகரித்து, அவற்றை முறைப்படுத்திப் பொருள் உணர்ந்து, பிழையின்றிப் பதிப்பித்தல் எளிதன்று. இச்சிறந்த தொண்டு உலகம் உள்ளளவும் தமிழ் நாடு மறவாது! மறவாது!! ஐயரவர்களின் திருப்பெயர் குன்றின்மீதிட்ட விளக்கெனஎக் காலத்தும் பொலிவது உறுதியே.

1887-ம் ஆண்டில் சீவக சிந்தாமணியும், 1892-ல் சிலப்பதிகாரமும், 1899-ல் மணிமேகலையும் வெளி வந்தன. எனவே, இம்மூன்று பெருங்காப்பிய நூல்களையும் வைத்துக்கொண்டு ஓய்வின்றி ஏறக்குறைய பதினாறு ஆண்டுகள் ஐயர் ஆராய்ச்சி செய்துள்ளார் என்பது நன்கு விளங்குகின்றது. இவர் தம் தளரா ஊக்கத்தை யார்தாம் புகழப் பின்வாங்குவர் ?

இவை யன்றி, 1889-ல் பத்துப் பாட்டு என்னும் சங்க நூலும், 1894-ல் புறநானூறு என்னும் சங்கநூலும் ஐயரால் வெளியிடப் பெற்றன. இவற்றிற்கு ஐயர் பட்டபாடு மிகப்பெரிது. பல பெருமக்கள் பொருளுதவி செய்தார்களெனினும், ஏடுகளைச் சேர்த்து ஆராய்ச்சி செய்து அச்சிடல் மிகத் துன்பமான வேலையாகும். ஐயருக்குத் தமிழில் இருந்த பேரூக்கமே இவரை இவ்வரிய தொண்டு செய்யத் தூண்டியதென்பது உண்மை.

தமிழ் மொழி—தமிழர்—தமிழ்ப் புலவர் என்று இன்று சிறிதளவேனும் நாம் பேசுவது ஐயரின் அருந்தொண்டினுல் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. இப்பேருதவி புரிந்து தமிழ் உலகத்தைச் சிறிதேனும் தலை நிமிரச் செய்த பெரியாருக்கு மஹா மஹோபாத்தியாயர் என்னும் பட்டத்தைச் சென்னை அரசாங்கத்தார் அளித்துக் களித்தனர்; சென்னைப் பல்கலைக்கழகத்தார் டாக்டர் ஆப் லிட்டரேச்சர் (Doctor of Literature) என்னும் கௌரவப் பட்டத்தை அளித்து மகிழ்ந்தனர். மஹா மஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநா

தையர் இன்றும்—தமது முதுமைப் பருவத்தில்—பல தமிழ் நூல்களை ஆராய்ந்து பதிப்பித்து வருகின்றார் எனின், இவர்தம் உலையா உழைப்பையும் சலியா ஊக் கத்தையும் என்னெனப் புகழ்வோம்!

---

## 14. நோயற்றவாழ்வு

1. நான் ஐம்பது வயதுக்குமேல் உடற்பயிற்சி செய்ய லானேன். என் வயது இப்போது 73. ஆனால், நான் 35 வய துடைய வாலிபனாக விளங்குகிறேன்.

—ஜான்போர்டு பென்னெட்

2. உடற் பயிற்சியால் நீண்ட ஆயுளைப் பெறலாம்.

—டாக்டர் லெ. சோமசுந்தரம்

உடற்பயிற்சியால் நோயற்ற வாழ்வைப் பெறலாம். அது பலவீனரைப் பலமுள்ளவராக்கும்; கிழவரைக் குமராக்கும். குமாருக்கு அதிக இளமை தரும். உடற்பயிற்சியே ஒருவனை வலிமையுள்ளவனாகவும், அழ குள்ளவனாகவும், நோயற்றவனாகவும், மன அமைதி உடையவனாகவும் செய்யும் இயற்கையான துணை என்ன லாம். இத்தகைய அருந்துணையைப் பிள்ளைகளாகிய நீங்கள் பெறாவிடின், அந்தோ! உங்கள் வாழ்நாள் வலி யற்று விடும். ஆதலின், அருமை மக்களே, தினந் தோறும் விடா முயற்சியுடன் ஒழுங்காக உடற்பயிற்சி யைச் செய்யுங்கள். உடற்பயிற்சியால் நம்பிக்கை, உற் சாகம், ஊக்கம், வலிமை முதலியன வளரும்; மூளை சக்தி பெற்று என்றும் அழியா இன்பத்தை நாடும். இதுவன்றோ சுக வாழ்வு!

உடற்பயிற்சியை ஆடவர் பெண்டிர் இருபாலரும் செய்யலாம். அமெரிக்காவில் பெயர் பெற்று விளங்கும் டிரனுபீச் என்னும் நடிக மாதரசியார் எட்டு மாதக் குழந்தையாக இருக்கையில் இவரது ஒரு கால் ஊன மாகி விட்டது. இதைக் குணப்படுத்த முடியாதென வைத்திய நிபுணர் பலர் கூறி விட்டனர். ஆனால், உடற் பயிற்சியால் இவ்வம்மையார் தமக்கு நேர்ந்த ஊனத் தைக் குணப்படுத்தி, இன்று அமெரிக்காவிலேயே சிறந்த நடிகராகவும், மிக்கஆரோக்கியம் வாய்ந்த அழ கினராகவும் இருக்கின்றார். இவர், தம் மனம் போன வாறு உடலை வளைத்துச் செய்யும் அற்புத நடனங்கள் பார்க்கப் பெருவியப்பளிக்கும்.

ஸ்ரீமதி பேடட்டே டாம்ரே என்பவர் பெயர் பெற்ற பிரிட்டிஷ் நடன மாதரசியார் ஆவர். இவர் உடற்பயிற்சியால் மிக்க உரம் பெற்ற உடலைப் பெற் றுள்ளார். இவரது முதுகெலும்பு இரப்பரைப் போல எப்பக்கமும் வளையக்கூடியதாயுள்ளது. இவரது வயது பதினெட்டு. ஐந்தாண்டுகளுக்குள் இவர் உடற்பயிற்சி யால் இத்தகைய இளமையையும் அழகையும், புகழை யும் பெற்றிருக்கின்றார்.

அமெரிக்கப் பெண்கள் வாட்போர் புரிவது காணத் தக்கவொரு காட்சியாகும். மேனாட்டுப் பெண்கள் உடலை வளர்ப்பதில் எவ்வளவு பேரூக்கம் கொண்டுள் ளார்கள் என்பது மேற் காட்டிய மூன்று செய்திகளி லிருந்தே நன்கறியலாம். பெண்டிரே உடற் பயிற்சி செய்கையில், மேனாட்டு ஆடவரைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ ?

சலியா உடற் பயிற்சியால் மேனாட்டு மக்கள் உடல் உரம் பெற்று, நோயற்று, இன்ப வாழ்க்கையை நடத்து கின்றார்கள். ஆனால், நம் தாய் நாட்டு மக்கள் உடலோம் பலைக் கவனிப்பதே இல்லை. சுவரை வைத்துக்கொண் டன்றோ சித்திரம் எழுத வேண்டும்? நமது உடலை நன்னிலையில் வைத்திருப்போமாயின், நீண்ட ஆயுளை யும் ஒப்பற்ற அழகையும் பெறலாம்; உழைத்து வேலை செய்யலாம்; இன்ப வாழ்க்கையை நடத்தலாம்.

நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் அல்லவா?

---

## 15. இந்திய ஊழியர் சங்கம்

1. இந்தியர்களே என் சகோதரர்கள்; அவர்களே என் உயிர்.

2. இந்திய ஜன சமூகமே நான் பிறந்து வளர்ந்த தொட் டில்; என் இளமையின் இன்பப் பூங்கா; என் மூப்பின் தவச் சாலை.

3. இந்திய நிலமே எனது சுவர்க்கம்; இந்தியாவின் நலனே என் நலன். இதை முன்னுக்குக் கொண்டு வருதலே எனது முதற் கடமையாகும்.

—**விவேகானந்த அடிகள்**

நம் தாய்நாட்டு நலத்துக்குத் தொண்டு செய்த பல பெரியார்களுள் கோபால கிருஷ்ண கோகலே என்பவர் ஒருவர். அவர் சிறந்த அறிஞர்; இந்தியர் குறைகளைப் பாராளுமன்றத்தில் (Parliament) எடுத்து விளக்கிப் பல நன்மைகள் செய்தவர். அப்பெரியார் நாட்டுக்கு உண்மையான சேவை செய்யும் சங்கம் ஒன்றை

1905-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-ஆந் தேதியன்று பூனாவில் தாபித்தார். அதற்கு இந்திய ஊழியர் சங்கம் என்பது பெயர்.

அச்சபை அங்கத்தினர் தம் சொந்த வேலைகளையும் கவனியாது, சொந்த வருமானத்தையும் கவனியாது, நாட்டுப் பணி ஒன்றையே நன்னோக்கமாகக் கொள்ளவேண்டும்; எல்லாச் சாதியினரும்—மதத்தினரும் அங்கத்தினராகலாம்; அங்கத்தினர் பொது மக்களுக்கு நாட்டுப் பற்றை ஊட்ட வேண்டும்; பொது மக்கள் சமூக வாழ்க்கையைச் சீர்ப்படுத்த வேண்டும்; எல்லாச் சாதி மக்களும் ஒற்றுமை—சமத்துவம்—சகோதரத்வத்துடன் வாழப் பாடுபட வேண்டும்; பெண் கல்வி, கைத்தொழிற் கல்வி, சாத்திரக் கல்வி, தாழ்ந்த வகுப்பார்க்குக் கல்வி—ஆயவற்றைக் கற்பித்து மக்களை முன்னேற்றல் வேண்டும் என்பனவே இந்திய ஊழியர் சங்கத்தின் சிறந்த நோக்கங்கள் ஆகும்.

சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் முதலில் ஐந்தாண்டுகள் வேலை கற்றுக்கொள்ள வேண்டும். பயிற்சி பெறும் ஒவ்வோர் அங்கத்தினருக்கும் மாதம் ஒன்றுக்கு 65 ரூபாய் வீதம் முதல் இரண்டாண்டுகட்கும், பின்னர் மாதம் 75 ரூபாய் வீதம் மற்ற மூன்று வருடங்கட்கும் சங்கத்திலிருந்து கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு சாதாரண அங்கத்தினர்க்கும் மாதம் 90 ரூபாய் வீதம் முதல் 5 ஆண்டுகளுக்கும், பின்னர் மாதம் 110 ரூபாய் வீதம் அடுத்த ஐந்து வருடங்களுக்கும், பின்னர் மாதம் 125 ரூபாய் வீதம் எப்பொழுதும்

தரப்படும். இவ்வாறு பற்பல முறைகளைப் பின்பற்றி அங்கத்தினர்க்குத் தேவையான பணத்தைச் சங்கமே உதவிவருகின்றது. இந்திய ஊழியர் சங்கம் பூனாவில் இருந்த போதிலும் பம்பாய், சென்னை, ஐக்கிய மாகாணங்கள், மத்திய மாகாணங்கள் முதலிய இடங்களில் கிளைகளை வைத்துச் சேவை செய்து வருகிறது.

அரசியல் விஷயமாக இச்சங்கம் சிறந்த சேவை செய்து வருகின்றது. நம் தாய்நாட்டு மக்கள் தென் ஆப்பிரிக்காவில் அல்லலுற்றபோது சங்கத்தின் தலைவராக இருந்த கனம் - வி. சீனிவாச சாஸ்திரியார் அங்குச் சென்று, அரசாங்கத்தாரைக் கொண்டு சில நன்மைகள் செய்வித்தார். கல்வித் துறையிலும் இச்சங்கத்தார் மிகவும் உழைத்து வருகின்றனர்; பூனாவில் சேவாசாதனம் முதலியவற்றின்மூலம் பல பெரிய பெண் பள்ளிகளை வைத்து, நூற்றுக் கணக்கான பெண்களுக்குக் கல்வி போதிக்கின்றனர்; தாழ்ந்த வகுப்பார்க்கும்—காட்டு வாசிகட்கும் பள்ளிகளை வைத்துக் கல்வியும் கைத்தொழிலும் போதிக்கின்றனர். சங்க அங்கத்தினர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையில் பாடுபடுகின்றனர். சங்க அங்கத்தினரான ஜோஷி என்பார் இந்தியத் தொழிலாளர்க்கென மிக உழைத்து வருகின்றார். மதுவிலக்குப் பிரசாரம் செய்து நாட்டு மக்களையும் நல்வழிப்படுத்தி வருகின்றவர் தாக்கர் என்னும் அன்பராவர். சேவா சாதனம் முதலிய கல்வித்துறையில் ஊக்கங் காட்டி வருபவர் தேவதார் என்பவர். இப்பொழுது சங்கத் தலைவராக இருப்பவர் இவரே.

இப்பெருமக்கள் ஏழைக்குடியானவர்க்கும் தொழிலாளிகட்கும் கடன் உதவி செய்யப் பல ஐக்கிய நாணயச் சங்கங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர்; ஐக்கிய விஷயங்களைக் கற்பிக்க ஒரு கலாசாலையையும் ஒரு பத்திரிகையையும் நடத்தி வருகின்றனர்; நாட்டு மக்களுக்குச் சுகாதார அறிவூட்டப் பல சங்கங்களை ஏற்படுத்தி வேலை செய்து வருகின்றனர். விழாக்களும் மகா நாடுகளும் நடைபெறும் இடங்களில் இச்சங்கத்தார் சென்று, பொது மக்களுக்குப் பல வழிகளிலும் தொண்டு செய்கின்றனர்.

நாட்டில் திடீரெனத் தோன்றி ஆயிரக் கணக்கான மக்களைக் கொல்லும் பிளேக், காலரா முதலிய கொடிய நோய்களைப் போக்க இச்சங்கத்தார் இது வரை ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு, ஆயிரக் கணக்கான மக்களைக் காப்பாற்றி உள்ளனர்; பல பாகங்களில் உண்டான கொடிய பஞ்சங்களினின்றும் நம் நாட்டு மக்களைக் காத்துள்ளனர்; கலகங்கள் நடைபெற்ற இடங்களில் பொருளைப் பறிகொடுத்த மக்களுக்குப் பொருள் உதவி செய்துள்ளனர்; வெள்ளத்தால்—தீயால் நஷ்டம் அடைந்த எளிய மக்களுக்குப் பணவுதவி செய்திருக்கின்றனர்; இன்றும் செய்து வருகின்றனர்.

இந்திய ஊழியர் சங்கம்—தத்தம் பட்டம் பதவிகளைப் பொருட்படுத்தாமல் நாட்டுச் சேவையே பெரிதென மதித்துத் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து, பொது நன்மைக் குழைக்கும் அங்கத்தினரைக் கொண்ட இச்சங்கம்—

பணி செய்து கிடப்பதே பேரின்பமாக நினைத்து உழைத்து மறைந்த தேச பக்தர் கோபால கிருஷ்ண கோகலே தாபித்த இச்சங்கம்—இன்று நமது தாய் நாட்டில் ஆற்றும் தொண்டுகள் பல. பொதுநலத்துக்கு உழைக்கும் இச்சங்கப் பெருமக்கள் ஏழை மக்களின் இருதய கமலத்தில் என்றும் குடி கொள்வர். நாட்டு மக்கள் இவர்களைத் தேவ தூதர்கள் எனக் கருதுவதில் வியப்பென்ன ?

---

## 16. பண்டிதை இராம பாய்

1. ஒரு நாடு முன்னேற்றம் பெற, அந்நாட்டுப் பெண் மக்கள் முதலில் முன்னேற்றம் பெற வேண்டும்.

**—ஜான்சன்**

2. உலக விருத்திக்குக் காரணரான புலவர்கள்—மகான்கள்—வீரர்கள் இவர்களைப் பெற்று வளர்ப்பவர் பெண்டிரே. ஆதலின், பெண்டிர் உலகம் பெரிதும் முன்னேறல் வேண்டும். பெண்டிர் முன்னேற்றத்துக்கு உழைப்பதே பெரு நெறியாம்.

**—இரவீந்திர நாத தாகூர்.**

நம் தாய் நாட்டில் பெண்டிர் முன்னேற்றத்துக்கு உழைத்த பெரு மக்களில் பெண்டிரும் இடம் பெற்றுள்ளனர். அத்தகைய பெண்டிருள் பண்டிதை இராம பாய் என்பவர் ஒருவராவர். அவர் கி. பி. 1850-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிறந்தார். பன்னிரண்டு வயதுக்குள் பல நூல்களைக் கற்றுத் தேறி, 1800 செய்யுட்களை மனப்பாடஞ் செய்திருந்தார். அவருடைய பெற்றோர் இராம பாயையும் அவர் தமையனையும் விட்டு வறுமைக் கொடுமையால் காலமாயினர்.

ஏறக்குறையப் பதினைந்து வயதுடைய இராம பாய் தம் சகோதரரோடு இந்தியா முழுவதும் சுற்ற லாயினர். தமக்குற்ற உறவினர் எவரும் இன்மையால், அவ்விருவரும் ஒவ்வோர் ஊரில் உள்ள மடத்தில் தங்குவதும் மீண்டும் பிரயாணம் செய்வதுமா யிருந் தனர்; தங்கள் பிரயாணத்தில் பற்பல சாதி மக்களின் வாழ்க்கை நிலை, இறை வழிபாடு, அறச் சாலைகளின் நிலை முதலியவற்றைக் கருத்துடன் கவனித்தனர்; வங் காளி, ஹிந்தி, மஹாராட்டிரம், துளுவம், கன்னடம், வடமொழி முதலாய மொழிகளில் தேர்ச்சியுற்றனர்; பெண்களின் உண்மையான நிலை, குருட்டுப் பழக்க வழக்கங்கள், இன்ன பிறவும் நேரிற் கண்டறிந்தனர்; மக்களுக்கு நேரும் பசி, நோய், கொடுமை, வறுமை இவற்றையும், இவற்றைச் சகிப்பதால் மக்ளிடம் அன்பு, மனத்திடம், நம்பிக்கை, பொறுமை முதலிய அரிய குணங்கள் உண்டாதலையும் கண்டனர்.

இராம பாய் தாம் செய்த இருபத்திரண்டு வருட யாத்திரையின் பயனாய் மிகப் பறந்த அறிவைப் பெற் றார்; அதன் பயனாக, மூன்று சிறந்த விரதங்களை நோற்கத் துணிந்தார். அவை: i. இறைவனைப் பற்றி ஆராய்தல்; ii. பெண்மக்களின் அறிவையும் ஒழுக் கத்தையும் தம்மால் இயன்றவரை வளர்த்தல்; iii. குழந்தை வளர்ப்பு, சமூகப் பொதுநன்மை இவற் றுக்கு உழைத்தல் என்பன.

இராம பாய் 1878-ஆம் ஆண்டு வங்காளத்தில் தங்கிப் பல இடங்களில் மாதர் முன்னேற்றத்திற்குற்ற அரிய பல பிரசங்கங்கள் புரிந்தார்; பெண்களுக்குப்

புராணங்கள், உபநிடதங்கள், வேதங்கள் இவற்றுள் பொதிந்துள்ள சிறந்த உண்மைகளைக் கற்பித்து, அவர்களை நன்னெறியில் பழக்கி வந்தார். அவரது அரிய சேவை எங்கும் பரவவே, பம்பாய் மாகாணத்தார் தம்மிடம் வருமாறு அம்மையாரை வேண்டினர். அதற்கு அவர், எனது உடலில் ஒரு துளி இரத்தம் இருக்கும் வரை என் நாட்டுச் சகோதரிகட்காக உழைக்கத்தயார்,'' என்ற உயரிய செய்தியைப் பம்பாய்க்கு அனுப்பினர்.

பின்னர்ச் சிறிது காலம் அம்மையார் இல்வாழ்க்கையை நடத்தி, ஒரு பெண் மகவைப் பெற்று விதவையானார். அதன் பின்னர், அவர் பம்பாய் மாகாணத்தை அடைந்தார்; ஊர் ஊராகச் சென்று பெண்கள் முன்னேற்றத்திற்குற்ற துறைகளையும் அவற்றைத் தடுத்து நிற்கும் மூட பக்தி, அறியாமை, வீண் பாரம்பரியக் கொள்கைகள், பகுத்தறிவுக்கு ஒவ்வாச் சடங்குகள், ஆசாரங்கள் முதலியவற்றைக் கண்டித்து அரிய பிரசங்கங்கள் செய்தார்; 1883-ல் ஆரிய மகிலா சமாஜம் என்ற சங்கம் ஒன்றைத் தாபித்தார்; பெண்கள் நன்மையின் பொருட்டுப் பல 'பெண் வைத்தியர்கள்' நியமிக்கப்படல் வேண்டும் என்றும், இந்திய மாதர் அவ்வைத்திய முறையில் தேறும் வழிகளை உண்டாக்க வேண்டும் என்றும் பல அரசாங்க உத்தியோகஸ்தருடனும் பாதிரிகளுடனும் கலந்து யோசித்தார். இவ்விரண்டையும் பற்றிய மனு ஒன்று நம் நற்றுயாரான விக்டோரியா மகாராணியாருக்கு அனுப்பப்பட்டது. அதன் பயனாக முதன்முதல் டபரின் சீமாட்டி இயக்கம் என்ற சங்கம் தோன்றிப் பெண்கள் வைத்திய உதவி பெறும்

நன்மை ஏற்பட்டது. இந் நன்மைக்குப் பெரிதுமுழைத் தவர் பண்டிதை இராம பாயேயாவர்.

இங்ஙனம், பெண்கள் முன்னேற்றத்துக்கு உழைத்து வந்த இராம பாய் அம்மையார் ஆங்கிலே யர் அழைப்புக்கு இணங்கி, இலண்டன் சென்றார்; அங்குள்ள பெண்கள் சங்கத்தார் செய்துவந்த அரிய சேவைகளைக் கண்டார்; கிறித்தவ மதத்தைத் தாபிக் கத் தம் ஆருயிரைத் தந்த நாசரேத்தூர் அடிகளின் அன்பு கனிந்த உபதேசங்களிலும், மெய்த் தொண்டி லும் உளங் குழைந்த அம்மையார் கிறித்தவ மதத்தைத் தழுவினர். பின்னர், அவர் அமெரிக்கா சென்று அங் கிருந்த அறிஞர் அன்பையும் உதவியையும் பெற்றுத் தம் தாய்நாட்டை அடைந்து, தொண்டு செய்ய இறங்கி னார்.

அம்மையார் பூனுவில் சாரதா சாதன் என்ற தர்ம ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, நாட்டின் பல்வேறு பாகங் களில் இடர்ப்பட்டு வருந்திய இந்து விதவைகள், அனு தைப்பெண்கள் முதலியோரைச்சேர்த்து, அவர்களுக்கு உணவு, உடை முதலியன வழங்கினார்; நற்றுறையில் பழக்கி, அவர்கட்குப் பல தொழில்களையும் குடும்ப சாத் திரங்களையும் கற்பித்தார்; முத்தி ஆச்சிரமம் என்பதைக் கேட்கான் என்னும் இடத்தில் தாபித்து, ஆயிரக்கணக் கான பெண்களுக்கும் பிள்ளைகட்கும் கடவுளது அன்பு நெறியைப் போதித்தார்; கூன், குருடு முதலிய உறுப் பற்றவரைப் படிப்பிக்கப் பல கல்விச் சாலைகளை நிறுவி னார்; பற்பல இடங்களில் வறுமையாலும், நோயாலும்,

பஞ்சத்தாலும் வாடிய மக்களை வரவழைத்து உணவு உடைகளை வழங்கினர்.

இங்ஙனம், ஆண்டவனுக்கும் அடியவர்க்கும் உயிர்கட்கும் தம் அன்பைக் கனியச் செய்து அருந்தொண்டாற்றிய இராமபாய் அம்மையார் தமது அறுபத்து மூன்றாம் வயதில் இறைவனடி சேர்ந்தார். இராமபாய் போன்ற மற்றொருவரை இந்தியத்தாய் என்று பெறுவாள்?

---

## 17 இசை இன்பம்

1. இசைக்கு உருகாதார் எவரும் இல்லை.

—**டாக்டர் உ. வே. சாமிநாதையர்**

2. இசை, கற்றார்—கல்லார்—விலங்கினங்கள்—பறவைகள் முதலிய எல்லா உயிர்களுக்கும் இன்பந்தரும்.

—**இரவீந்திர நாத தாகூர்**

சங்கீத உணர்ச்சி எல்லா இயற்கை உணர்ச்சிகளையும்விட மிகவும் வலிமை வாய்ந்ததாகும். உலகவாழ்க்கையில் இன்பத்தோடு வாழ்வை நடத்த விரும்பும் ஒவ்வொருவரும் இசை இன்பத்தை நுகர்ந்தேவருகின்றனர். நாகரிகம் மிகுந்துள்ள இக்காலத்தில் சென்னைபோன்ற நகரங்களில் வீட்டுக்கு வீடு கிராமபோன் இருந்தே தீருகின்றது. ஆயிரக் கணக்கான ஆடவரும் பெண்டிரும் சங்கீத மணிகளாக விளங்குகின்றார்கள். புல்லாங்குழல், வீணை முதலான இசைக்கருவிகள் மல்கிக் கிடக்கின்றன இவை யாவற்றையும் விட இரேடியோ என்னும் ஒலி பரப்புங் கருவியின் மூலம் சங்கீதக் கலை உலகெலாம் பரப்பப்படுகின்றது. சென்னை, கல்கத்தா, பம்பாய்

போன்ற பெரிய நகரங்களில் இக்கருவிகள் வாயிலாகத் தினந்தோறும் ஆயிரக் கணக்கான மக்கள் இசை இன்பத்தை நுகர்கின்றார்கள். இங்ஙனம் சங்கீத உலகம் மிக்க முன்னேற்றம் அடைந்து வருவதால், இதன் பெருமை எத்தன்மைத்தாக இருக்கும் என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள்.

இசை கல் மனத்னதயும் கரைந்துருகச் செய்யக் கூடியது. இஃது அன்பை வளர்க்கக் கூடியது. இசையைக் கேட்டு மகிழும் செடிகளும் உள. கொடிய விடமுள்ள படநாகமும் இசைக்குக் கட்டுப்படுகின்றது. அழுகின்ற சிறு குழந்தைகளும் அசையைக் கேட்டு அழுகை நீங்கி இன்பம் அடைகின்றன. சில அரும்புகள் வண்டுகள் இசை பாட மலர்கின்றன. மதம் பிடித்த—குத்துக்கோலுக்கும் பாகனுக்கும் அடங்காத—யானைகளும் இசைக்கு அடங்கிவிடுகின்றன.

'தினைக் கொல்லையைக் காவல்புரியும் குறிஞ்சிநிலப் பெண் ஒருத்தி, பரண்மேல் நின்று காற்றில் தன் கூந்தலை ஆற்றிக்கொண்டு மிகுந்த களிப்புடன் இசைப் பாட்டைப் பாடிக்கொண்டிருந்தாள்; அவ்வமயம் தினைக் கதிரை உண்ண வந்த யானை ஒன்று அப்பெண்ணின் இசையில் மயங்கித் தன் கடும்பசியை மறந்து மயங்கி நின்றது' என்னும் இச்செய்தி அகநானூறு என்னும் தமிழ் நூலில் கூறப்பட்டுள்ளது.

பசுக்கள் இசையின் வயப்படுகின்றன என்பதைக் கண்ணன் கதையிலிருந்து அறிந்து கொள்ளலாம். பசுக்களை ஒருங்கு கூட்டக் கண்ணன் தன் குழலை எடுத்து ஊதுவான்; உடனே பல இடங்களிலும் நின்று மேய்ந்து

கொண்டிருந்த பசுக்கள் இசை இன்பத்தால் ஈர்க்கப்பட்டுக் கண்ணனை அடையுமாம்.

மக்கள், வண்டி மாடு, கபிலை ஏற்றக் காளைகள் முதலியவற்றை இயக்குகையில் தெம்மாங்கு முதலிய பாடல்களைப் பாடுகின்றனர். அப் பாடல்களைக் கேட்டு அவ் விலங்குகள் தம் வேலையைச் சிறிதும் வருத்தமின்றி மிக்க அமைதியாகச் செய்கின்றன. இந்நிகழ்ச்சியை ஒவ்வொரு கிராமத்திலும் காணலாம்.

சீவக சிந்தாமணி என்னுஞ் சங்க நூலின் கதா நாயகனை சீவகன் ஆடவரை காணவும் வெறுப்புற்றிருந்த சுரமஞ்சரி என்னும் பெண்ணினிடம் முதியவன் வேடத்தோடு சென்று, தங்க இடம் பெற்று, உண்ட பின்னர் மிக்க இனிமையாகப் பாடி அவளை தன்னை விரும்புமாறு செய்தான். அவன் பாடியபோது அவளும் அவள் தோழிகளும் வேடன் பறவையைப் போலக் கத்தும் ஓசையைக் கேட்டு மயங்கிக்கூட்டமாக வரும் மயிலினங்களைப் போல ஓடி வந்தனராம். என்னே பாடல் செய்த பரவசம் !

அன்புள்ள பிள்ளைகளே! இத்தகைய பெருமை வாய்ந்த இசையை நீவிர் ஒவ்வொருவரும் பயில வேண்டும். உடற்பயிற்சி, மனப்பயிற்சி, கலைபயிற்சி, உணவு இவை நமக்குத் தேவையானவை போலவே இசையும் இன்றியமையாதது. இசையால் மனம் உருகும்; ஒருவழிப்படும்; அன்பு அரும்பும்; அன்பு அரும்ப, எண்ணம் நன்றாகும்; எண்ணத்தினின்றும் செயல் பிறக்கின்றது. எனவே, இசை நம்மை அன்புருவான அண்ணலை அணுகச் செய்து, இடையறா இன்பத்தை அளிக்கும்.

---

## 18. நாலந்தா சர்வகலாசாலை

இந்தியா—நமது தாய்நாடு உண்மை ஞானத்துக்கும், கலைப் பெருக்கத்துக்கும் தலை சிறந்த நாடாக விளங்கியதென்னும் உண்மை உலகத்தவர் அறிந்ததே. அத்தகையசிறப்புக்குப் பெருங்காரணமாகவிளங்கியவை பண்டைக் காலத்தில் விளங்கிய சர்வ கலாசாலைகளே என்க. இத்தகைய சர்வ கலாசாலைகளில் மாணவரும் ஆசிரியரும் உடனுறைந்தமை குறிப்பிடத் தக்கது. மாணவர் ஆசிரியரைக் கவுரவித்து அடக்கம், பொறை, ஊக்கம், ஒழுக்கம் இன்னவற்றோடு விளங்கிக் கல்வி கற்று வந்ததால், கலைப் பெருக்கம் நம் நாட்டுக்கே உரியதாயிருந்தது. ஆசிரியரும் மாணவரைத் தம் மக்களினும் மேலாக மதித்து அன்பு கனியப் போதித்த முறையும் பாராட்டற் பாலது. கால நியதிகளுக்குக் கட்டுப்பட்டு அம்மாணவர் நடந்து வந்தமையும் போற்றற்குரியது. சுருங்கக் கூறின், மாணவர்க்கு உரிய உயரிய குணங்களும்ஒழுக்கமும் ஒருங்கு சேர்ந்திருந்தமையால், அக்கால மாணவர் நம் தாய்நாட்டுக்குக் குன்றாப் புகழைத் தேடி வைத்தனர் என்னலாம்.

இங்ஙனம் பெருமையுற்று விளங்கிய அக்காலச் சர்வ கலாசாலைகளில் நாலந்தா சர்வகலாசாலை என்பது ஒன்றாகும். அது நாலந்தா (கொடுப்பதில் திருப்தி யடையாதவன்) என்னும் பட்டம் பெற்ற மன்னன் ஒருவனால் தாபிக்கப்பட்டதாகும். இவ்வேந்தனால் தாபிக்கப்பெற்ற இக்கலாசாலை முதலில் மிகச் சிறிய அளவினதாயிருந்தது. பின்னர்ச் 'சக்கிராதித்தன்' என்னும் அரசன்

இச்சர்வகலாசாலைக்குப் பெரிய கட்டடம் ஒன்றைக் கட்டுவித்தான். அவன் மகன் 'புத்த குப்தன்' அதன் அருகே மற்றொரு கட்டடம் கட்டுவித்தான். பின்னர்த் 'ததாகத குப்தன்' மூன்றும் கட்டடம் கட்டுவித்தான். 'பாலா தித்தன்' என்னும் வேந்தன் மற்றொன்றை அமைத்தான். இங்ஙனம் சில வேந்தர், கட்டடங்களைக் கட்டுவித்தனர். சிலர் இச்சர்வகலாசாலை ஒழுங்காய் நடைபெறப் பொருளுதவி புரிந்தனர். இங்ஙனம் மன்னர்களின் ஒத்துழைப்பினால் இச்சர்வகலாசாலை மிக்க முன்னேற்றமடைந்த காலம் கி. பி. 400-ல் இருந்து கி. பி. 800 வரையாகும்.

சர்வகலாசாலையைச் சேர்ந்த கட்டடங்கள் காண் போர் உள்ளத்தைக் கவர்வனவாகும். மிகப் பெரிய விசாலமான கூடங்களும், சித்திர வேலைப்பாடமைந்த உத்தரங்களும், பல நிறங்களைக் கொண்ட சித்திரங் களால் அலங்கரிக்கப்பெற்ற கதவுகளும், சாளரங்களும், அறியாமையை அகற்றி ஆத்ம ஒளியைப் பரப்ப அமைந்த ஏகாந்த இடங்களை ஒத்த அழகிய அமைதி நிலவிய அறைகளும் கொண்ட நாலந்தா சர்வகலாசாலை, நமது தாய்நாட்டின் பண்டைக் கலைப் பெருக்கத்தைச் சித்திரித்துக் காட்டும் இன்ப மயமான ஓவியமாக விளங் கியதென்னல் மிகையாகாது.

இச்சர்வகலாசாலை அமைந்திருந்த இடம் புத்த மகான் சிறிது காலம் தங்கியிருந்த காட்டகம் என்று சரித்திரக்காரர் கூறுகின்றனர். சர்வகலாசாலையின் ஒவ் வோர் அறையிலும் ஆசனம் ஒன்று அமைக்கப்பட்டி ருந்தது. அதன்மீது புத்த மகான் வீற்றிருப்பதாக

நினைத்து, ஆசிரியர் அவர் பாதங்களின் அடியில் இருந்து மாணவர்க்குப் பாடங் கற்பித்து வந்தனர். ஆசிரியரும் மாணவரும் சந்நியாசி உடைகளையே தரித்து வந்தனர்.

நாலந்தா சர்வகலாசாலைக்கு இருநூறு கிராமங்கள் பெரு மக்களால் மானியமாக விடப்பட்டிருந்தன. அக் கிராமங்களின் வருவாயைக் கொண்டே சர்வ கலாசாலை நடைபெற்று வந்தது. இக்கலாசாலையில் மூவாயிரம் மாணவர் கல்வி பயின்றுவந்தனர். சீனதேசத்திலிருந்து வந்த ஹிவான்சுவாங் போன்ற யாத்ரீகரும் இதில் மாணவராயிருந்தனர் எனின், இச்சர்வகலாசாலையின் அளப்பரும்பெருமையை எங்ஙனம் எடுத்துரைப்போம்!

இப்பெருமை வாய்ந்த கலாசாலையில் ஆறு வயது முதல் 25 வயதுவரையில் மாணவர் கல்வி பயின்று வந்தனர். அவர்கள் படித்த நூல்களையும் கணக்கற்ற சுலோகங்களையும் கேட்டு நீங்கள் உண்மையாகவே வியப்படைவீர்கள்.

(1) ஆறு வயது மாணவன் 300 சுலோகங்களை ஆறு மாதத்திற்குள் படித்து முடித்தல் வேண்டும். எட்டு வரை அவற்றையே திருப்பித் திருப்பி மனப் பாடம் செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

(2) எட்டு வயதில் 'பாணினி'யால் எழுதப்பெற்ற ஆரம்ப இலக்கண நூலில் 1000 சூத்திரங்களை 8 மாதத்துக்குள் மனப்பாடஞ் செய்தல் வேண்டும்.

(3) ஒன்பது வயதில் தாது இலக்கண நூலில் உள்ள 1000 சுலோகங்களை 8 மாதத்திற்குள் பாடஞ் செய்தல் வேண்டும்.

(4) பத்து வயதில் 'மூன்று கிலங்கள்' என்னும் நூல்களில் உள்ள (ஒவ்வொன்றிலும் ஆயிரம்) சூத்திரங்களை மூன்றாண்டுகட்குள் படித்து முடிக்க வேண்டும்.

(5) பதின்மூன்று வயது முதல் பதினைந்துவரையில் முன்னர்ப் படித்தவற்றை மனப்பாடஞ் செய்து முடித்தல் வேண்டும்.

மேற் கூறியவற்றில் தேர்ச்சியுள்ளவரே மேற்படிப்புப் படிக்க அனுமதிக்கப் பெற்றனர்.

மேற்படிப்புப் பதினைந்து முதல் இருபது வயது வரையில் ஆகும். இவ்வைந்து வருடகாலம் மாணவர், பல கலைகளிற் பழகுவர்; தர்க்கம், தத்துவ ஞானம் முதலியவற்றைப் பற்றிய நூல்களைக் கற்றுத் தேறுவர்; வியாசம் எழுதுதல், பிரசங்கம் புரிதல், தர்க்கஞ் செய்தல் முதலியவற்றில் தேர்ச்சியுறுவர்.

இப்பயிற்சியுடன் சில மாணவர் நின்றுவிடுவர். அவர் தம் வாழ்க்கையை நடத்த உத்தியோகங்களை நாடுவர்; பலர் குருகுலங்களை அமைத்துச் சமூகத்தொண்டு, கலை வளர்ச்சிக்குரிய முறையில் பாடுபடுதல் முதலிய துறைகளில் ஈடுபடுவர். பொதுமக்களும் அரசரும் அவர் தம் கல்விக்கேற்றவாறு பொருளுதவி புரிவர்.

இருபது வயதுக்கு மேலும் படிக்க விரும்புவோர்க்கு இருபத்தைந்து வயது வரையில் படிக்கத் தக்க உயர்தரக் கல்வியும் நாலந்தா சர்வகலாசாலையில் போதிக்கப் பெற்றது. உலகங்களின் அமைப்பும், மனிதர் ஒழுக வேண்டிய முறைகளும் பிறவும் கூறும் 24,000 சூத்திரங்களைக் கொண்ட 'கூர்ணி' என்னும் நூலை அம் மாணவர் மூன்றாண்டுகள் படித்தல்வேண்டும். பின்னர்,

இருபத்து மூன்று முதல் இருபத்தைந்து வயது வரை கூர்ணிக்கு விரிவு நூலான 'பர்த்திரி ஹரி சாத்திரம்' என்பதைப் படித்தல் வேண்டும். அது 25,000 சூத்திரங்களைக் கொண்டது. அதில் நீதி முறைகள், இம்மை மறுமையின் உண்மைகள் முதலியன விரிவாயடங்கி உள்ளன.

அன்புள்ள மக்களே,

இத்துணை அரிய—ஒழுக்க மேம்பாடுற்ற—பரந்த அறிவைத் தரத்தக்க—நூல்களைக் கற்ற அக்கால மாணவர்தம் கலைப் பெருக்கை என்னெனப் புகழ்வது! நூல்களால் அறிவு விரிவடைகின்றது. பரந்த அறிவினால் நன்மை தீமையை உணர்ந்து, நேரிய நெறியில் வாழ்க்கையை நடத்த அறிஞர் முற்படுவர். எனவே, ஒழுக்கம் நிறைந்த சீரிய வாழ்க்கையை நடத்தக் கலைப் பெருக்கம் இன்றியமையாதது என்பது பெறப்படுகின்றது. ஆதலின், இத்தகைய குருகுலங்களிலோ - சர்வகலாசாலைகளிலோ - நீங்கள் படிக்க முடியாவிடினும், அறிவையும் ஒழுக்கத்தையும் ஒருங்கே வளர்க்கும் அரிய நூல்களை முயன்று கற்றல் வேண்டும். அங்ஙிலையிற்றான் நீங்கள், உங்கள் கடமையும் உங்கள் வாழ்க்கையின் இலட்சியமும் இன்னவை என எளிதில் வகுத்தறிந்து அவற்றைப் பின்பற்றக்கூடும்.

## 19, அடிமைத்தனம் அகற்றிய அண்ணல்

1. அடிமைத்தனத்தை அகற்ற என் ஆருயிரையும் நான் அர்ப்பணஞ் செய்யத் துணிந்துள்ளேன்.

வில்லியம் லாயிட் காரிசன்

2. அடிமைத்தனத்தை விடக்கொடியதொன்று மனித சமூகத்தில் இல்லை என்னலாம் அதனை யான் அகற்றியே தீருவேன்.

ஆபிரகாம் லிங்கன்

மனிதனுக்கு மனிதன் அடிமை என்பதைவிடக் கொடியதொன்றில்லை. செல்வன் ஏழையை அடிமையாக்குதல், நீக்ரோவர் போன்ற மக்களைப் பிடித்துப் பொது இடத்தில் விற்று அடிமைத் தொழில் செய்ய வைத்தல்—இவற்றைவிடக் கொடியவை என்னுள! இத்தகைய அடிமைவியாபாரம் ஒரு காலத்தில் ஆப்பிரிக்கா, அரேபியா, அமெரிக்கா முதலிய நாடுகளில் மிக்க உச்ச நிலையை அடைந்திருந்தன. அதனை அடியோடு ஒழிக்கப் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் மிக முயன்றனர். அவர்களின் பெருமுயற்சியால் அடிமை வர்த்தகம் அழிவுற்றது.

அமெரிக்காவில் அடிமைத்தனத்தைச் சட்ட மூலமாக ஒழித்தவர் ஆபிரகாம் லிங்கன் என்பவர். அமெரிக்கர் உள்ளத்திலிருந்து அடிமைத்தனத்தை அறவே அகற்றியவர் வில்லியம் லாயிட் காரிசன் என்னும் உத்தமர் ஆவர். இப்பெரியார் தம் அரிய வாணாட்களை இச்சிறந்த ஒரு தொண்டிற்காகவே செலவழித்தார் என்பதை அறிய நீங்கள் வியப்படைவீர்கள்.

காரிசன் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களைச் சேர்ந்தவர்; 1804-ஆம் ஆண்டிற் பிறந்தவர்; மிக எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்; பரம ஏழையாதலின், சிறு வயதிலேயே ஒரு சக்கிலியினிடம் வேலைக்கமர்ந்தார்; கூர்ந்த அறிவும், பரந்த நோக்கமும் உடைய இவர் சக்கிலியத் தொழிலை வெறுத்துத் தச்சு வேலையில் அமர்ந்தார்; தம் பதினெட்டாம் வயதில் ஓர் அச்சி யந்திர சாலையில் வேலைக்கமர்ந்தார். இவ்வேலையிற்றான் இவர் மனம் ஈடுபட்டது. ஓய்வு நேரங்களில் இவர் பல நூல்களைப் படித்து நன்றாய் எழுதுமாற்றலும் பேசுமாற்றலும் பெற்றார்; தேச சரித்திரங்களையும், பெரியார்களின் வாழ்க்கைச் சரிதங்களையும் கற்றுணர்ந்தார்; பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வந்தார். நாட்கள் செல்லச் செல்ல இவர் கட்டுரைகள் மக்கள் மனத்தைக் கவர்ந்தன. பின்னர்ச் சில காலம் சில பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்து புகழ் பெற்றார்.

பத்திரிகைத் தொழிலில் போதிய அநுபவம் வந்ததும் இவர், தாமே ஒரு பத்திரிகையை நடத்தத் துணிந்தார். இவர், குடியையும் அதனால் உண்டாகும் தீமைகளையும் விலக்கப் பாடுபடல்; நாட்டினின்றும் அடிமை வாழ்கையை அடியோடு அகற்றப் பாடுபடல்; நாட்டில் என்றும் சமாதானம் நிலைத்திருக்கச் செய்ய உழைத்தல் என்னும் மூன்று சிறந்த தொண்டுகளைச் செய்யவே பத்திரிகையை நடத்த விரும்பினார்.

இவ்வாறு எண்ணிப் பத்திரிகையை ஆரம்பிப்பதற்குள் இவர், அடிமை வர்த்தகம் புரிந்த வர்த்தகன் ஒருவனைப்பற்றிக் கடுமையாகக் கண்டித்துப் பத்திரிகை

யில் எழுதினார். அதனாற் சினங்கொண்ட அவ்வணிகன் இவர்மீது வழக்குத் தொடர்ந்தான். அவ்வழக்கில் நீதிபதி, காரிசன் குற்றவாளி எனத் தீர்மானித்து அவருக்கு அபராதமும் சிறைவாசமும் விதித்தார். எனினும் காரிசன் பொறுமையோடும் முகமலர்ச்சியோடும் இரண்டையும் ஏற்றுக்கொண்டார். ஆயினும், அடிமை வர்த்தகத்தை ஒழிக்க வேண்டும் என்னும் பேரவா மட்டும் அவர் மனத்தை விட்டு மறையவில்லை. இஃதன்றோ உண்மைத் தொண்டு செய்பவர்தம் உயர்ந்த இலட்சணமாகும்.

சமூக ஊழலை நீக்கப் பாடுபட்ட காரிசனைச் சிறை செய்ததை கேள்வியுற்ற அறிஞர் பலர் ஆத்திரங்கொண்டனர். நாளடைவில் பலர் காரிசனோடு சேர்ந்து உழைக்கக் காரணமாயிருந்தது நீதிபதியளித்த தண்டனை என்பதில் ஐயமில்லை.

எண்ணம் உறுதிப்படவே, காரிசன் தனியாக லிபரேட்டர் என்னும் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார்; தமக்குப் பண உதவி புரியுமாறு பெரு மக்களை வேண்டினார். பலர் இவருக்குப் பொருளுதவி புரிந்தனர். தம் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்க்க இவர் அமெரிக்கா முழுவதுஞ் சுற்றினார்; தம் கொள்கைகளை மிகத் தெளிவாக மக்களுக்கு எடுத்து விளக்கினார். இவரது பரோபகார உள்ளுணர்ச்சியைக் கண்டு மகிழ்ந்த பலர் சந்தாதாரராகச் சேர்ந்தனர் எனினும், ஆரம்பத்தில் பத்திரிகை நடத்துகையில் இவர் பட்ட இன்னல்கள் பல. பத்திரிகை ஆரம்பித்துப் பதினெட்டு மாதங்கள் வரையிலும் இவரும் இவர் கூட்டாளிகள்

இருவருமே அச்சுக்கூடத்தில் வேலை செய்தனர். படுக்கை வாங்கவும் பணமின்றி வெறுந் தரையில் காரிசன் படுத்திருந்த கொடுமையை என்னென்பது! நேர்மையான உணவுக்குப் பணமின்மையால், சொற்ப உணவே இவர் உட்கொள்ள நேர்ந்ததும் வருந்தத் தக்கதே. பொது நலத்துக்கு உண்மையாக உழைக்கும் ஒவ்வொருவர்க்கும் இத்துன்பங்கள் நேருவது இயற்கை போலும்.

இத்தகைய இன்னல்களைப் பொருமையோடு சகித்துக்கொண்டு, காரிசன் உற்சாகத்துடன் அடிமை வாழ்க்கையை அகற்ற உழைத்து வந்தார். அடிமைகளின் விடுதலையைப் பற்றிக் கோவில்களில் பேசப் பாதிரிகள் இவரை அனுமதிக்கவில்லை. அமெரிக்க அரசாங்கமும் இவர் நல்லுரையைக் கேட்கவில்லை. என்றாலும், மனோதைரியம் வாய்ந்த காரிசன் புன்முறுவலோடு, 'ஒரு காலத்தில் என் வார்த்தைகள் கேட்கப்படும்,' என்று கூறிவந்தார்.

உண்மையும் உழைப்பும் பயன் பெறுதல் இயற்கை அன்றோ? அறந்தொண்டு புரிந்த காரிசன் வார்த்தைகள் பாஸ்டன் நகர மக்களால் பொன்னே போலப் போற்றப்பட்டன. நாளடைவில் அமெரிக்கா இவர் வார்த்தைகளை மதிக்கத் தலைப்பட்டது. என்றாலும், அரசாங்கத்தால் இவருக்கு ஏற்பட்ட இன்னல்கள் பல. அவரைக் கைது செய்பவருக்கு ஆயிரக்கணக்கான டாலர்களைத் தருவதாகச் சட்டசபை கூவியது. இவரை அச்சுறுத்தி எழுதப்பெற்ற கடிதங்கள் பல, இவர் சொற்பொழிவைக் கேட்டு நின்ற மக்கள்

அனைவரும் கலக்கப்பட்டனர். பாஸ்டன் நகரில் இவர் ஒரு பெருங் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கையில், அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவர் இவர் கழுத்தில் கயிற்றைப் போட்டுப் பாஸ்டன் வீதிகளின் வழியே இழுத்துச் சென்று சிறையில் அடைத்தனர். இங்ஙனம் இவர் சிறைப்பட்டது 1835-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ஆந் தேதியில் ஆகும்,

இத்தகைய இன்னல்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தமது முடிவான இலட்சியத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து, அடிமை வாழ்க்கையை அகற்ற நாற்பதாண்டுகள் தொண்டு செய்து, முடிவில் வெற்றி பெற்றார். அவர் காலத்திற்குள் அடிமை வாழ்க்கையை எதிர்க்க ஆயிரக் கணக்கான சங்கங்கள் அமெரிக்காவில் தோன்றின.

1860-ல் ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் தலைவரானதும், காரிசன் இயக்கம் மிக்க வலுவடைந்தது ஏனெனில், லிங்கனும் அடிமை வாழ்க்கையைத் தொலைக்கப் பாடுபட்ட பெரியாராவர். அவர் தலைவரானதும் அடிமை விடுதலைச் சட்டம் ஒன்றை உண்டாக்கி, அடிமைத்தனத்தை அடியோடு ஒழித்தார்.

காரிசன் சாந்த குணம் படைத்த பெரியார்; எக்காரணத்தை முன்னிட்டும் சண்டை இடுவதையும் பலாத்காரஞ் செய்வதையும் அடியோடு வெறுத்தவர்; சத்தியத்தையும் அஹிம்சையுமே தமக்குரிய துணையாகக் கொண்டவர். இவரைப் போன்ற இவர் இன்னுயிர் மனைவியாரும் பிள்ளைகளும் சத்திய வழியில் நடப்பவர்கள்; மறந்தும் தீமை நினையாதவர்கள். இல்லற

வாழ்க்கையை இன்பமாக நடத்திய காரிசன் பெரியார் அடிமை வாழ்க்கையை அமெரிக்காவிலிருந்து அடியோடு விலக்கி, நீக்ரோவர், செவ்விந்தியர் இவர் தம் வாழ்க்கையைச் செம்மையுறச் செய்து குன்றாப் புகழடைந்தார். இத்தகைய உண்மைப் பெரியார்களாற்றான் சமூகம் முன்னேற்றம்அடைகின்றது. பிள்ளைகளே, பொதுநலத் தொண்டையே உங்களில் ஒவ்வொருவரும் சிறந்த இலட்சியமாகக் கொள்ளல் வேண்டும்.

---

## 20. அறம் வளர்த்த அசோகன்

இந்தியாவின் தெற்குப் பாகம் நீங்கலாக இந்தியா முழுவதையும், வெகு அமெரிக்கையுடனும் ஒழுங்குடனும் கி. மு. 272 முதல் 231 வரை அசோகன் என்னும் பெயர்பெற்ற மன்னவன் ஆண்டுவந்தான். அவன் மௌரிய இராச்சியத்தைஏற்படுத்திய சந்திரகுப்தனது பேரனவன். சந்திரகுப்தன் மனோ வல்லமை, தைரியம், வீரம் முதலிய அரசகுணங்கள் ஒருங்கே அமையப்பெற்றவன். வட இந்தியா முழுவதும், ஆப்கானிஸ்தானமும் அம்மன்னனது ஆட்சிக்குட்பட்டிருந்தது. அவன் மகனான 'பிந்துசாரன்' வெகு சாதுவானவன். அவனைப் பற்றிய விவரங்கள் நமது தேசக் கதைகளிலும் ஒன்றும் கிடையா. அவன் மகனான அசோகனால் மௌரிய வமிசத்திற்கும், இராச்சியத்திற்கும் பெரும் புகழ் ஏற்பட்டது. அசோகன் புத்த மதத்தைப் பரவச் செய்ததனாலாவது, அன்றி, பிராணி வதை கூடாதெனத் தடுத்ததனாலாவது அவன் புகழ் பெறவில்லை. பின்,

எதனுலெனின்,மக்களுக்குப் போதிக்கும் விஷயங்களைத் தானே நடத்திக் காட்டியதினுல் என்க.

அசோகன் சரிதையில், ஓர் அரசனுக்குரிய வெற்றி—தோல்விகளை நாம் எதிர்பார்த்தல் இயலாது. ஏனெனின், அவன் புத்தமதத்தினனானபின் சமாதான உணர்ச்சியையே கொண்டிருந்தான். அஞ்ஞானமக்களை ஞானத்தை நாடும்படிச் செய்து அவர்களைச் சன்மார்க்கத்தில் திருப்பிய பெருங் காருண்ய வள்ளல் அன்றே அசோகன்! உலகத்திலிருந்த 'நெப்போலியன்' முதலிய மகாவீரர்களை இவனுக்கு உவமையாகக்கூறலாமெனின், இவனது பெருமைக்கு முன் அவ்வீரர்கள் பெருமை பரிதி முன் விளக்குப் போலாகும். சிறிதும் டாம்பீகமின்றி, தான் செய்த வேலைகளையும், தான் வாழ்நாட்களை நடத்திய விதத்தையும் அம்மன்னன் வெகு நன்றாகவும், தெளிவாகவும் கற்கம்பங்களிலும், சிலாசாஸனங்களிலும் எழுதியுள்ளான்.

அசோகன், தான் பட்டம் அடைந்து ஆறிரண்டாண்டுகள் சென்ற பின்னர், கீழ்க் கரையில் மகா நதிக்கும் கோதாவரி நதிக்கும் இடையிலுள்ள கலிங்கதேசத்தின் மீது படை எடுத்தான்; அந்நாட்டை வென்று, தன் இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டான்.

எனினும், அந்த யுத்தமே அசோகனைப் பெரிய யோகியாகச் செய்தது என்பது மிகையாகாது. அம்மகா யுத்தத்தில் இலட்சக் கணக்கான வீரர் கைதிகளாக்கப் பட்டனர்; இலட்சக் கணக்கான ஜனங்கள் கொல்லப்பட்டார்கள்; இன்னும் பலர் வறுமையாலும்,காயங்களாலும் மாண்டனர். அந்த யுத்தத்தில் தந்தையரை இழந்த

வரும், தமையன்மாரை இழந்தவர்களும், பிள்ளைகளைப் பறி கொடுத்தவர்களும் போட்ட கூச்சலும், புலம்பலும் அசோகனது மனத்தை அனலிலிட்ட மெழுகு போல உருகச்செய்தன. இத்தகைய கஷ்ட நஷ்டங்களைத் தன் கண்ணுற் கண்டு, நுட்ப அறிவுவாய்ந்த அப்பெருந்தகை, இனி யுத்தம் செய்யலாகாதென உறுதியான எண்ணங்கொண்டான். அவ்வாறே, தான் இறக்குமளவும் ஒருவிதமான சண்டை சச்சரவுமின்றி நாட்டையும் குடிகளையும் அமைதியாக ஆண்டு வந்தான்.

அசோகன் கொண்ட தீர்மானம், அவன் புத்தமதத்தைத்தழுவிய பின்னர் மிகவும் உறுதிப்பட்டது. ஒருவன் தன்னைக் கவனிக்கு முன்னர்ப் பிறரைக் கவனிக்குமாறு புத்த மதம் கூறுகின்றது. அசோகன் இராஜ்யத்திலேயே முந்நூறு வருடங்கட்கு முன்னர்க் கௌதம புத்தர் புத்தமதக் கொள்கைகளைப் பிரசாரஞ் செய்துள்ளார். அதே நாட்டில் அசோகன் மீண்டும் அம்மதத்தைப்பரவச் செய்தான். மஞ்சள் உடைதரித்த பௌத்த சந்நியாசிகளை நாடெங்கும் அனுப்பி, மதத்தைப் பரவச் செய்தது அசோகனுக்குப் புகழையே உண்டாக்கினது. அசோகன் தர்ம மகா மாத்திரர் என்ற ஒரு கூட்டத்தாரைக் கிராமங்களுக்கெல்லாம் அனுப்பிப் பௌத்த மதத்தைப் போதிக்கச் செய்ததுமன்றி ஜீவ இம்சையைத் தடுத்தான். அதுவரையில் எண்ணிறந்தவிலங்குகள் ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு நாளும் கொல்லப்பட்டு வந்தன. அரசனுக்கும் பல ஆடு கோழி முதலிய பிராணிகள் இரையாகி வந்தன. முதலில் ஒரு நாளைக்கு மூன்றுபிராணிகளை அரசனுக்

காகக் கொன்று வந்தார்கள். பிறகு அவையும் நிறுத்தப் பட்டன. வேட்டையாடுவதையும் அசோகன் நிறுத்தி விட்டான்.

வேட்டையாடும் நேரத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் தான் நேரேசென்று புத்தமதக்கொள்கைகளைப் போதித்து வந்தான் அசோகன்; பிற மதத்தார் தத்தம் மதத்தையே பின்பற்றி வரலாமென்றும் ஏற்படுத்தி இருந்தான். ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வோர் உண்மை இருக்க வேண்டுமென்பது அசோகனது தீர்மானமாகும். சில அரசர்களைப்போன்று தன்மதத்தையே குடிகளும் தழுவுமாறு இப்பெரும் புகழ் மன்னன் சட்டம் விதிக்கவில்லை; குடிகளைத் துன்புறுத்தவுமில்லை; தான் செல்ல முடியாத இடங்களில் கற்றூண்களை நாட்டி அவற்றில் தன் மதக் கொள்கைகளையும், தான் அரசாளும் விதத்தையும் விரிவாய் எழுதியுள்ளான்.

மாதா பிதாக்கள் மக்களால் கவுரவப் படுத்தப் படல் வேண்டும்; உயிர்வாழ் பிராணிகள் யாவராலும் அன்பாக நடத்தப்படல் வேண்டும்; மரணத்தறுவாயிலும் உண்மையை உரைத்தல் வேண்டும்; சுயநலன் கருதாது பொது நலன் கருதல் வேண்டும் என்பவையே அம்மன்னனின்சிறந்தகொள்கைகளாகும். இவற்றையே அவன் குடிகளுக்குப் போதித்து, அவர்களையும் அந்நெறியில் நடக்குமாறு செய்வித்தான். இக்கொள்கைகளை அறியாதவர் ஒருவருமிலர். எனினும் அவற்றைப் பின்பற்றியவர் அசோகனுக்கு முன்னும் பின்னும் வந்த அரசர் ஒருவருமிலர். தான்மட்டும் அவ்விதிகளை

அநுசரித்ததன்றி, தன் குடிகளையும் அநுசரிக்கச் செய்து, அவர்களைத் தூய்மையாக்கிய புகழ் அசோக னுக்குப் புகழுடம்பைத் தந்தது. அத்தகைய சிறந்த குணத்தால் அவன் யாவராலும் எப்பொழுதும் வாழ்த் தப்படுகின்றான்.

தனது இராச்சியத்தில் ஒவ்வொரு நாட்டிலும் மனி தர்களுக்கென்றும், விலங்குகளுக்கென்றும் தனித்தனி யாகத் தர்ம வைதியசாலைகளை ஏற்படுத்தியிருந்தனன்; ஆங்காங்கு நந்தவனங்களும், அவற்றில் மருந்து மூலிகை கள், செடி கொடிகள் இவற்றைப் பயிர்செய்வித்து வந்த தாகவும்தெரிகின்றது. தன் நாட்டிவிருந்த அநாகரிக மனி தர்களைக் காப்பாற்றி அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்தான்; குடிகளுக்கு எவ்விதமான குறை இருப்பினும் நேரே வந்து எச்சமயத்திலும் தன்னிடம் தெரிவிக்குமாறு அறிவித்திருந்தான். அவனது இராச்சியத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கும் அவன் கண் பார்வையைப் பெறுமலில்லை என்றால் அப்பெருந்தகை யாளனின் அரசாட்சியைப் பற்றி என்னவென்று கூறு வது! அவனது காலத்தில் ஒரு பை நிறையப் பணம் நிரப்பி மனிதர் செல்லும் வழியில் போட்டாலும் அதை எடுப்பவர் இன்றி அவ்வாறே கிடக்கும். வீடுகளைப் பூட்டாமல் அவரவர் வெளியில் செல்வர். குடிகளுக்கு ஒருவித மனத் தாங்கலென்பது ஏற்படவில்லையாம்.

இவ்வேந்தர் பெருமான் மக்களுக்கும் விலங்குக ளுக்கும் நிழல்தருமாறு ஆங்காங்கு மரங்களையும் சோலை களையும் வளர்த்தான்; இரஸ்தாக்களில் நீர்ப்பந்தல்கள், அன்ன சத்திரங்கள் ஏற்படுத்தினன். 'தர்மம்' என்

பதைச் செய்கையிலும் மொழியிலும் செழிக்கச் செய்தவன் இம்மன்னனே! தனது மதத்தைப் பரவச் செய்ய இவன், தன் சகோதரியையும், புத்திரியையும், புத்திரர்களையும் ஊர் ஊராய் அனுப்பினன்; எப்பொழுதும் குடிகளின் நன்மையிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனன். ஆ! என்னே! அசோகன் ஆட்சி முறை!

இத்துணை நன்மைகளைச் செய்தும் அம்மகத்தான புனிதன் "நான் செய்த விஷயங்கள் மிகச் சிலவே; இவற்றால் என் மனம் திருப்தியுறவில்லை," என்று கூறுவது வழக்கம்.

இத்தகைய தர்ம குணாளனுக்கு இணையாக ஆங்கிலச் சரித்திரங்களிலுள்ள எவ்வரசனும் இணையாகான் என ஆங்கிலேயர்களே ஒத்துக்கொண்டனர் எனின், நம் மன்னர் மன்னனின் பெருமையைச் சொல்லவும் எளிதோ?

---

## 21. உழைப்பால் உயர்ந்த முசோலினி

1. **முசோலினி** தந்நம்பிக்கையும் உழைப்பும் அஞ்சாமையும் உடையவர். இம்மூன்றினுற்றான் கேவலம் கொல்லன் புத்திரரான இவர் இன்று இட்டாலி நாட்டின் **சர்வாதிகாரியாக** இருந்து வருகின்றார்.

—**எமில் லுட்விக்**

2. இட்டாலியின் சர்வாதிகாரியாக விளங்கும் **பெனிட்டோ முசோலினி,** தம் முதுகின் மீது செங்கற்களைத் தூக்கிச் சென்று பிழைத்து வந்தவர். எனினும், அவர் வேலை நேரம் போக எஞ்சிய நேரத்தில் தாமாகவே பல அரிய நூல்களைப் படித்து, இன்று சிறந்த உலக அறிஞராக விளங்குகின்

ஞர். தந்நம்பிக்கை, உழைப்பு, அஞ்சாமை இம்மூன்றுமே அவர் வெற்றிக்கு அடிகோலியவை.

—சர் பி. சீ. ரா.

இட்டாலியின் வீரரான பெனிடோ முசோலினி போர் வீரர் சந்ததியில் தோன்றியவர். அவர் தந்தையார் கொல்லுலைக் கூடம் வைத்து வேலை செய்து வந்தார். எனினும், அவர் அரசியல் கிளர்ச்சிகளிற் கலந்து, பல இன்னல்களை அடைந்தார். அவர் இன்னுயிர் மனைவியார் ரோசா என்பவர். அவ்வம்மையார் சாந்தமே உருவென வந்தவர். அவர் தாம் தங்கியிருந்த கிராமத்தில் இருந்த குழந்தைகளுக்கு உபாத்தியாயராக இருந்தார். கணவன்—மனைவி இருவர் வருமானமும் சேர்ந்து சொற்பமாக இருந்ததால், அவர்கள் நல்லுணவு கொள்ளவும் வசதியில்லாதிருந்தது.

அத்தகைய கேவல நிலையில் அவர்களுக்கு 1883-ஆம் வருடம் ஜுலை மாதம் 29-ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை இரண்டு மணிக்கு பெனிட்டோ முசோலினி பிறந்தார். இவர் ஞாயிற்றுக் கிழமையன்று பிறந்ததால், பிற்காலத்தில் பெருஞ் சிறப்புடன் வாழ்வர் என்று பலர் கூறினர். அவர்கள் கூறியதும் உண்மையாயிற்று.

முசோலினி சிறுவராக இருக்கையில், மிகுந்த துடுக்குடன் இருந்தார். எனினும், இவர் தம் அன்னையை மிக்க உள்ளன்புடன் நேசித்தார்; கருணையே உருவெடுத்தாற் போன்றிருந்த தம் ஆருயிர் அன்னையாரது மனம், தம் செய்கைகளால் வாட்டமுறா வண்ணம் தம் துஷ்டத்தனங்களை மறைக்கப் பாடுபட்

டார். இவர் ஆரம்பக் கல்வி கற்கையில், ஒரு நாளே னும் நல்லுணவு கொண்டதில்லையாம். கொடிய வறு மையே இதற்குக் காரணமாகும். சுருங்கக் கூறின் இவர் உயிருடன் இருப்பதா? இறப்பதா? என்ற பரிதாப நிலையில் வறுமையை அநுபவித்து வந்தனர். அந்நிலையில் இவர் தந்தையார் அரசியல் கிளர்ச்சியால் சிறையில் அடைக்கப்பட்டார். அதனால், முசோலினி நிலையும் இவர் தாயார் நிலையும் மிகக் கேவலமாய்விட் டது.

நுண்ணறிவும் அஞ்சாமையுங் கொண்ட சிறுவ ரான முசோலினி வாழ்க்கையில் வெறுப்புற்று வீட்டை விட்டு வெளிக் கிளம்பினர்; அவர் ஆருயிர் அன்னையாரை மறந்தார்; சிறையில் இருந்த தம் தந்தையாரை மறந்தார்; நேரே சுவிட்ஜர்லாந்து சென்றார்; கையிற் காசின்றித் தெருத் தெருவாக அலைந்து, முடிவில் 'சாக்கலேட்' செய்யும் கைத் தொழிற் சாலை ஒன்றில் சிறிய தொழிலாளராக அமர்ந்தார். சிறிது காலத்திற்குள் அவ்வேலையி லிருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னர்க் கட்டடம் கட்டும் இடங்களில் செங்கற்களை எடுத்துக்கொடுக் கும் கூலி வேலையில் அமர்ந்தார்; நாள் ஒன்றுக்கு நூற் றிருபது முறை ஓர் இரண்டடுக்கு மாடி வீட்டின் உயர ஏறி இறங்க வேண்டியிருந்தது.

பிள்ளைகளே! செங்கற்களை எடுத்துக்கொண்டு அத்துணை முறை ஏறி இறங்குவது எவ்வளவு துன்ப மான வேலை என்பதைச் சிறிதே எண்ணிப்பாருங் கள். என் செய்வது? பாவம்! ஏழைச் சிறுவரான

முசோலினி பட்ட துன்பங்கள் பல. எனினும் இவர் தாம் அடைந்த இன்னல்களால் மனம் தளரவில்லை. இதுவே இவரது பெரு வெற்றிக்குக் காரணமாகும். 'எனக்குச் சிறு வயதில் நேர்ந்த இன்னல்கள் யாவும். எதிர் காலத்தில் எனக்கு ஏற்படவிருக்கும் பெரு நிலைக்குரிய அறிகுறிகள், என்று நான் சிறுவனாயிருக்கையில் நினைத்ததுண்டு,” என்று முசோலினி தம் வரலாற்றில் கூறி இருப்பது கவனிக்கத் தக்கது.

இவர், அக்சேவல நிலையிலும் அரசியல் காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்; அதன் பயனாகப் பன்முறை சிறையில் அடைக்கப்பட்டார்; கடைசியில் சிறையினின்றும் தப்பியோடி சுவிட்ஜர்லாந்து சென்றார்; அங்கிருந்துகொண்டு பல பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதிப் பிழைத்து வந்தார். பின்னர்த் தாமாகவே ஒரு பத்திரிகையை வெளியிட ஆரம்பித்துத் தம் சம தருமக் கொள்கைகளை அதன் மூலம் இட்டாலி முழுவதும் பரவச்செய்தார். அதனால் ஏற்பட்ட கட்சிக்குத் சம தருமக் கட்சி அல்லது பாசிஸ்டு கட்சி என்பது பெயர். நாளடைவில், இக்கட்சியில் ஆயிரக் கணக்கான ஆடவர் பெண்டிர் சேர்ந்தனர்.

அக்காலத்தில் மஹா யுத்தம் மூண்டது. அப்போது போர் புரிந்த நாடுகளில் இட்டாலியும் ஒன்றாகும். அந்நெருக்கடியான நிலையில் முசோலினி தம் தாய் நாட்டைக் காக்கத் தம் கட்சியாருடன் மிகவுழைத்தார்; இட்டாலியின் பெரு வீரராகவும் விளங்கினார்.

போர் முடிந்த பின்னர், நாட்டு நிருவாகத்தை நேரிய முறையில் செய்யச் சக்தியற்றிருந்த இட்டாலி

மந்திரி சபையினரை நீக்க முசோலினி விரும்பினார்; தம் கட்சியாரை அணி வகுத்துத் தலை நகரான ரோமாபுரியை அடைந்தார். முசோலினியின் ஆற்றலையும் படை வலியையும் கண்ட அரசர் அவரை முதல் மந்திரியார் ஆக்கினர். உடனே, முசோலினி தாம் விரும்பியவாறு மந்திரி சபையை அமைத்துத் தம் மனம்போல இட்டாலியின் சர்வாதிகாரியானார். உழைப் பளித்த உயர்வன்றோ இது!

முசோலினி இட்டாலியின்—தம் தாய்நாட்டின் அபி விருத்தியிலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கின்றார். இவர் எப்போதும் உலகில் தோன்றி மறைந்த வெற்றி வீரர் வரலாறுகளையும், பெரியார்தம் கருத்துகளையும் ஆழ்ந்து ஆராய்ந்து வருகின்றார்; அப்பெரு மக்கள் செயல்களோடு தாம் செய்வனவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்து, நல்லவற்றைச் செய்து வருகின்றார். தாம் செய்வது தவறென்பதை அறிந்தவுடனே அதை மாற் றிக்கொள்ளும் பெருந்தன்மை இவரிடம் தலை சிறந்து விளங்குகின்றது. உண்மைத் தலைவர்களுக்கு இருக்க வேண்டும் சிறந்த இலட்சணங்களில் இஃதொன்றாகும்.

பிள்ளைகளே! முசோலினியின் இளமைப் பருவத் தில் நிகழ்ந்தவற்றையும் இவர் இப்போதுள்ள நிலையை யும் சிறிதே சிந்தித்துப் பாருங்கள்: இவர் தந்நம் பிக்கை, ஊக்கம், உழைப்பு, அஞ்சாமை என்னும் சிறந்த குணங்களால், தமக்கேற்பட்ட கொடிய இன்னல் களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் மேலும் மேலும் உயர்நிலையை நாடி உழைத்துவந்ததால் அன்றோ, இன்று உலகம் மதிக்கத் தக்க மிக உயர்ந்த நிலையில் இருக்கின்

ரூர்? ஆகவே, உழைப்பே ஒருவனை உயர்ந்தவனாக்கும் என்பது தெளிவாகிறதன்றோ? நீங்களும் நம்பிக்கையோடு உழைப்பீர்களாயின், வாழ்க்கையின் சிக்கல்களைத் தகர்த்து உயர் நிலையை எய்துவீர்கள் என்பது திண்ணம்.

---

## 22. அமெரிக்கர் அறச் செயல்

1. அமெரிக்கர் அறச் செயலைக் கண்டும் நம் தாய் நாட்டுச் செல்வந்தர் அவர்களைப் பின்பற்றாதது வருந்தத் தக்கதே.

—ஜெ. எம். குமரப்பா

செல்வம் தன் அவசியமான செலவுக்கு மேற்பட்டதாயின், ஒருவன் அதனை மக்கள் நன்மைக்கு அளித்தலே மாண்புடையது. வீணாகப் பெட்டிகளில் அடைபட்டுக் கிடக்கும் செல்வத்தைக் கொண்டு உலக மக்களை எத்துணை முன்னேற்றக் கூடும் என்பதைச் செல்வந்தர் சிறிது நேரமாயினும் சிந்திப்பாராயின், அவர் மனம் அறச்செயலையே நாடும். எல்லோரும் இன்புற்று இருக்க நினைக்கும் தூய நினைவினால் உண்டாகும் செயலே அறச் செயல் என்பது. இத்தகைய அறச்செயல் உலக அறியாமையை அகற்றி மக்கட்சமூகத்தை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருந்தன்மையுடையது. இதன் ஏற்றத்தை அமெரிக்கர் நன்கறிந்துள்ளனர் என்பது கீழ் வருவனவற்றால் நன்கறியலாம்.

கார்னகி என்னும் கோடீஸ்வரர் பொது மக்கள் நன்மைக்கென 105 கோடி ரூபாய் தருமஞ் செய்துள்ளார். இவர் 3000 புத்தக நிலையங்களும் (Libraries)

சர்ச்சுகளில் பயன்படத் தக்க 8000 இசைப் பெருங் கருவிகளும் உலகத்துக்கு அளித்துள்ளார். இத்தரு மத்தை மேற்பார்வையிடக் 'கார்னகி கார்ப்பொரேஷன்' என்னும் ஸ்தாபனம் ஒன்று அமெரிக்காவில் ஏற்பட் டுள்ளது. கார்னகி ஏற்படுத்தியுள்ள தர்ம ஸ்தாபனங் கட்குப் பணவுதவி செய்து, அவற்றைச் சரிவரப் பார் த்துவருதல்; அவசியமாயின், புதியதர்ம ஸ்தாபனங்களை யும் ஏற்படுத்திக் காத்து வருதல்— இக்கார்ப்பொரேஷ னின் வேலைகளாகும்.

இராக் பெல்லர் என்னும் பெரியார் 165 கோடி ரூபாய்க்கு அதிகமாகவே தருமஞ் செய்துள்ளனர். பொது மக்கள் சுகம், சுகவாழ்வு, சுகாதாரம் வைத்தி யக் கல்விச் சாலைகள், சர்வகலாசாலைகள், நோயாளிகட் குத்தருமச் சிகிச்சை செய்யும் இடங்கள், சர்க்கார் சுகா தார ஏற்பாடுகள், சுகாதாரச் சங்கங்கள் முதலானவற் றிற்கு ஏராளமான பணவுதவி செய்துள்ளனர்; அமெ ரிக்காவுக்கே அன்றிப் பிற நாடுகளில் உள்ள பதினேழு சர்வகலாசாலைகளுக்கும், உயர்தர வைத்தியக் கலாசாலை கட்கும், பெருவாரியான பணத்தைத் தருமஞ் செய்துள் ளனர்; மலேரியா ஜுர நிவாரணத்துக்கும், கொக்கிப்புழு நோய்க்குச் செய்யவேண்டும் சிகிச்சைக்கும், சுகாதாரப் பிரசங்கங்கட்கும் பிறவற்றுக்கும் இலட்சக் கணக்கான ரூபாய் செலவழித்துள்ளனர். சுருங்கக் கூறின், இத் தருமம் உலகெலாம் நடைபெற்று வருகின்றது. இராக் பெல்லர் தருமநிதியைப் பெறாத நாடோ— தீவோ— உலகில் இல்லை என்னலாம்.

அமெரிக்காவில் 'ஏல்' என்னும் இடத்தில் உள்ள சர்வகலாசாலைக்கு ஹார்னேஸ் என்னும் கனவான் 4 கோடி 30 லட்சம் ரூபாய் அளித்தனர்; 'ஹார்வார்டு' சர்வகலாசாலை மாணவர் தங்குவதற்கு விடுதிகள் கட்டி முடிக்க 3 கோடி 60 லட்சம் ரூபாய் அளித்தனர்; இங்ஙனம் எண்ணற்கரிய துறைகளில் இப்பெரியார் பெருவாரியாகத் தருமஞ்செய்துள்ளார்.

வில்லியம் ஜீக்லர் என்னும் அம்மையார் குருடர் தடவிப் படிப்பதற்காக ஒரு மாதப் பத்திரிகை நடத்தி வருகின்றார். இதற்காக அவர் 17 லட்சம் ரூபாய் தருமம் செய்துள்ளார். கனத்த காகிதத்தின் மேல் உப்பலாக எழும்பியுள்ள எழுத்துக்களால் அச்சிடப்பெற்ற மாதப் பத்திரிகை வெளி வருகின்றது. இப்பத்திரிகை அமெரிக்காவில் உள்ள பதினையாயிரம் குருடர்களுக்கும் புத்துயிர் அளிக்கின்றது. இது சிறந்த அறச் செயல் அன்றோ ?

குழந்தைகளின் சுகம், சுகாதாரம், மகிழ்ச்சி, மன அமைதி, வளர்ப்பு முதலியவற்றிற்கென மில்பாங்கு, ஜேம்ஸ் கௌசேன்ஸ் என்னும் இரண்டு பெருமக்கள் மும்மூன்று கோடி ரூபாய் அளித்துள்ளனர். இவ்வறச் செயல் உலகெலாம் பரவியுள்ளது. குழந்தைகளின் கல்வி, நன்னடக்கை, உடற் பயிற்சி, சமூக வளர்ச்சி இவற்றிற்கும் இப்பணத்தின் வட்டி செலவழிக்கப்படுகின்றது.

மில்டன் எஸ் ஹர்ஷே என்னும் கனவான் 'ஹர்ஷே' என்னும் இடத்தில் ஒரு கைத்தொழிற் கல்விச் சாலையையும், அத்துடன் மாணவர் சாப்பாட்டு

விடுதியையும் நடத்தி வர 12 கோடி ரூபாய் உதவியுள்ளார். நோயாளிகள் பாதுகாப்பு, குழந்தைகள் பாதுகாப்பு, கர்ப்பவதிகள் பாதுகாப்பு முதலியவற்றிற்குத் தாதியர் தேர்ச்சிபெறக் கலாசாலையொன்றை ஏற்படுத்தச் சி. சி. போல்டன் என்னும் அம்மையார் 45 லட்ச ரூபாய் அளித்துள்ளனர்.

இவையன்றித் தாவர சாத்திரம், மிருக சாத்திரம், சிற்ப சாத்திரம், கைத்தொழில், தொழிற்சாலை முதலிய பல திறப்பட்ட கலைஞானங்கட்கெனப் பெருமக்கள் பலர் பெருவாரியாகப் பணவுதவி செய்துள்ளனர். தேகப் பயிற்சி விளையாட்டுகளுக்கென ரேம் டாம்கின்ஸ் என்னும் அம்மையார் 90 லக்ஷரூபாய் உதவியுள்ளார். பல பெரு மக்கள் தங்கள் செல்வத்தைக் கல்வி அபிவிருத்திக்கே அளித்துள்ளார்கள். ஏழைப் பெண்களின் கல்விக்கெனப் பல பெரு மக்கள் உதவியால் பல கலாசாலைகள் அமெரிக்காவில் நடைபெற்று வருகின்றன. பழைய மாணவர் மாணவிகள் ஏற்படுத்தியுள்ள சங்கங்கள் தற்போதைய கலாசாலைகட்கும் பிறவற்றிற்கும் பணவுதவி செய்து வருதல் பாராட்டற்பாலது.

அமெரிக்க அரசாங்கம் எவ்வெவற்றை உடனே செய்யத் தயங்குமோ, அவ்வவற்றை உடனே செய்து முடிக்க இத்தரும ஸ்தாபனங்கள் பேருதவியாயிருக்கின்றன. பொதுவாக ஏழைப் பிள்ளைகள் கவலையின்றிக் கல்வி கற்க இந்த ஸ்தாபனங்கள் வசதி அளிப்பதே மிகச் சிறந்ததெனக் கூறலாம். இவற்றின் நோககங்கள் யாவும் மாணவ மாணவிகட்கே பெரிதும் உதவி

அளிப்பவையாக இருப்பதால், இவற்ருல் உலகம் நன்னிலை அடைவது நிச்சயம்.

சுருங்கக் கூறின், அமெரிக்க ஐக்ய மாகாணங்களில் மனிதன் எதனை விரும்புகின்ருனே, அதற்கெல்லாம் தரும ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும் அதன் செலவுக்குப் பணத்தடை இன்றி ஒழுங்காக நடந்து சமூக உதவி செய்து வருவதையும் காணலாம்.

அமெரிக்காவில் உள்ள கோடீஸ்வரர்களைப் போலப் பெரு நிலையில் நம்மவர் இராவிடினும் ஓரளவேனும் செல்வந்தராக இருப்பது போற்றற்குரியது. ஆனல் இவர்களிற் பெரும்பாலர் தம் ஏழைச் சகோதர சகோதரிகளைக் கனவிலும் நினைப்பதில்லை. அவர் ஏழை ம்க்களின் பரிதாப நிலையைச் சிறிதேனும் சிந்திப்பாராயின், எண்ணிலாத் தரும ஸ்தாபனங்கள் நம் நாட்டில் ஏற்படுத்தக் கூடும். ஓரளவு நம் ஏழை மக்கள் சுகமுறக் கூடும். இந்திய நாட்டுச் செல்வர் அமெரிக்கரைப் பின் பற்றுவாரா ?

---

## 23. இன்ப நிலை

### சுவாமி. இராமதீர்த்தரின் பேருரை

**நானக விளங்கும் சகோதரர்களே! சகோதரிகளே!!**

இன்பம் எங்கிருந்து தோன்றுகின்றது என்பதை ஆராய்வதே இவ்வுரையின் நோக்கமாகும். உலகில் அரசன் முதல் ஆண்டி ஈருகவுள்ள அனைவரது முடி

*Swami Rama Thirtha used to address " *My own Self in the form of Ladies & Gentlemen.*"

வான இலட்சியம் இன்பம் நுகர வேண்டுமென்பதே ஆகும். அத்தகைய இன்பத்தின் பிறப்பிடம் எது என்பதைக் காண்போம்: முதலில் ஒரு சிறிய குழந்தையை எடுத்துக்கொள்ளுங்கள்: அது பிறந்தவுடன் இன்பத்தை எங்குக் காண்கின்றது? தன்னைப் பெற்ற தாயின் அரிய பாலில் அன்றோ? அதனையே அக்குழந்தை இன்ப நிலையாகக் கருதுகின்றது. பாலைத் தவிர வேறு பொருள்களில் அக்குழந்தைக்கு இன்பம் தோன்றுவதில்லை.

குழந்தை இரண்டு வயதடைந்ததும், அதன் இன்ப நிலையும் தாய்ப் பாலிலிருந்து விளையாட்டுப்பொருள்கள் மீது பாய்கின்றது. அந்நிலையில் அது தாய்ப்பாலை விட விளையாட்டுப் பொருள்களே தனக்கு அளவிலா இன்பம் அளிக்கின்றன என்பதை நம்புகின்றது. சில வேளைகளில் அவ்விளையாட்டுப் பொருள்களுக்காகத் தன்னையீன்ற அன்னையிடமே அக்குழந்தை பூசலிடுவதையும் காண்கிறோம். இரண்டொரு ஆண்டுகள் கழிந்த பின்னர்ப் பெரிய விளையாட்டுப் பொருள்களில் அப்பிள்ளை தன் இன்பத்தைக் காண்கிறது; தாய்ப் பாலையும் சிறிய பொருள்களையும் அறவே மறந்து விடுகிறது. அவ்விரண்டையும்விட மேலான இன்பத்தைத்தர வல்லவை பெரிய விளையாட்டுப் பொருள்களேயென அக்குழந்தை மதிக்கின்றது.

குழந்தை சிறுவனாகிப் பள்ளியிற் சேர்ந்த பின் இன்ப நிலையும் மாறுதல் அடைகின்றது. சிறுவன் பாடப் புத்தகங்களில் தனக்குரிய இன்பத்தைச் காண்கின்றான்; பிறந்தது முதல் தன் இன்பத்துக்கு இடமா

யிருந்தவற்றை அறவே மறந்து விடுகின்ருன்; தன்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த அருந்தாயை மறக்கின்ருன்; வாசிக்கும் நிலை அடைந்ததும், அவன் கதைப் புத்தகங்களில் இன்ப உணர்ச்சியைக் காண்கின்ருன்; முந்திய யாவற்றையும் விடக் கதைப் புத்தகங்களே இன்பந் தருவன என்று நினைக்கின்ருன்.

அவனது வயதும் பருவமும் மாறுவதைப் போலவே அவனது இன்ப நிலையும் மாறிக்கொண்டே செல்கின்றது. அவன், பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரிப் படிப்புப் படிக்கையில் உயர்தர நூல்களில் இன்பத்தை நுகர்கின்ருன்; அவற்றைத் தனக்கு இன்பமளிக்கும் கருவிகளாக எண்ணுகின்ருன். ஆம்; கல்லூரிப் படிப்பும் முடிந்தது; உத்தியோகமும் கிடைத்தது. இந்நிலையில், பொருள் ஈட்டுவதில் அவ்வாலிபன் இன்பத்தைக் காண்கின்ருன்; பொருளாற்ருன் உலகத்தில் புகழும் இன்ப வாழ்க்கையும் பெறலாம் என்பதை நம்பிப் பொருள் தேடுவதிலேயே தன் இன்ப நிலையைக் காண்கின்ருன்.

பொருளும் சிறிது கிடைத்தவுடன், அவன் மனநிலை மாறுகின்றது; தன் தனிமையைப் போக்குந் துணையை விரும்புகின்ருன்; அஃதாவது, தனக்கொரு மனைவி வேண்டுமென்பதை உணர்கின்ருன் என்பதே. அம்மனைவி இடத்திலேயே தனக்குரிய இன்ப நிலை அடங்கியுள்ளதாகக் கருதுகின்ருன்; தன் விருப்பப்படியே ஒரு பெண்ணை மணஞ் செய்துகொள்ளுகின்ருன். இம்மனைவியினிடத்திலாவது அவனது இன்பம் நிலைத்துள்ளதா? இல்லை! இல்லை!!

இல்லற இன்பத்திலும் அவ் வாலிபனுக்குக் கவலை தோன்றுகின்றது. அவனது இன்ப நிலை மனைவியினிடத்தினின்று குழந்தைமேற் பாய்கின்றது. அதனால், அவன் தனக்குக் குழந்தை வேண்டுமென விரும்புகின்றான். அதற்கு வேண்டும் ஆராதனைகள், யாத்திரைகள் முதலானவற்றைச் செய்கின்றான்; குழந்தைக்கும் தந்தையாகி விடுகின்றான். ஆ! அப்போது அவனடையும் இன்பம் கூறுந் தரமன்று. இன்பக் கடலில் அவன் ஆழ்கின்றான்; குழந்தையின் இனிய முகத்தைக் கண்டு கண்டு மகிழ்கின்றான்; தனது நிலைத்த இன்பம் குழந்தையினிடமே இருப்பதாக எண்ணுகின்றான். ஆண்டுகள் செல்லச் செல்ல வாலிபன் முதுமை எய்துகின்றான்; சிறுவனும் பள்ளியிற் படிக்கும் சிறுவனாகின்றான். அந்நிலையில் தந்தை, மகன் பிறந்தபோதடைந்த இன்பத்தை அடைவதில்லை. ஏன்? அவன் இன்ப நிலை மாறிக் கொண்டே இருக்கின்றது.

இன்பம் உண்மையாகவே தாய்ப் பாலிலோ, விளையாட்டுப் பொருள்களிலோ, கதைப் புத்தகங்களிலோ, அறிவு வளர்ச்சிக்குரிய நூல்களிலோ, பணத்திலோ, மனைவியினிடத்திலோ, குழந்தையினிடத்திலோ, பிறவற்றிலோ இருக்கின்றதா?

கதிரவன் ஒளி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கும், அங்கிருந்து வேறோர் இடத்திற்கும் விட்டு விட்டுச் சென்றுகொண்டே இருக்கின்றது. ஆனால், ஒளி உண்மையில் எங்கிருந்து உண்டாகின்றது? கதிரவனிடத்திலிருந்தன்றோ உண்டாகின்

றது. ஒளி பல இடங்களுக்குச் சென்றாலும், அதன் பிறப்பிடம் சூரியனே. அங்ஙனமே, நாம் நமது வாழ்க்கையில் பல பொருள்களிடமிருந்து இன்பத்தைப் பெறுவதாக நினைப்பினும், உண்மையான இன்பத்தைத் தரத்தக்க—இன்பம் தோன்றுகின்ற—இடங்கள் மேற்கூறிய தாய்ப்பால் முதலியன இல்லை! இல்லை !!

கணவன் மனைவியை விரும்பாவிடின், அவளை நீக்கி விடுகின்றான். அவ்வாறே மனைவியும் தான் விரும்பாவிடின், கணவனை நீக்கி விடுகின்றாள். இதனால் நாம் அறிவது யாது? தனக்கு இன்பத்தைத் தரத்தக்க நிலையில் மற்றவர் இருக்க வேண்டுமென்றே ஒவ்வொருவரும் எதிர்பார்க்கின்றனர் என்பது தெளிவாகிறதல்லவா? ஆகவே, நமக்கு மிகப் பயனளிக்கத் தக்கவை எவையோ அவையே நமக்கு இன்பமளிக்கின்றன என்று நாம் நினைக்கின்றோம். அவை நமக்குப் பயன்படாவிடின், நாம் அவற்றை உடனே தள்ளிவிடுகின்றோம். எனவே, இன்பம் என்பது பொருள்களிடத்திலா அல்லது நம்மிடத்திலா இருக்கின்றது?

ஆம்: இன்ப நிலை நம்மிடத்திலேயே இருக்கின்றது. அஃது உலகப் பொருள்களில் இல்லை! இல்லை!! இன்பத்தைப் பிறவற்றில் காணும் திறமை நமக்கு இயற்கையில் அமைந்துள்ளது. இதுவே உண்மை. இதனை அறியாமல் மக்கள் உலகப் பொருள்களில்—உயர்திணை, அஃறிணைப் பொருள்களில்—இன்பம் இருப்பதாக மயங்குதல் தவறாகும். இன்பத்தையோ துன்பத்தையோ உண்டாக்கிக்கொள்ளுந் திறன் நம்மிடம் அமைந்துள்ளது. பிற

வற்றால் நாம் இன்பத்தையோ துன்பத்தையோ பெறுவதில்லை. ஆகவே, இன்பம் நிலைத்துள்ள இடம் நம்மிடத்திலே இருக்கின்றதென்பதை அறிக.

நம் அறிவு, உயிர் இவை யாவற்றையும் விடச்சிறந்த 'நான்', 'என்' உயிர், என் உடல் என்று சொல்லும் உயர்ந்த பொருள் எதுவோ, அதுவே இன்பத்துக்கு இருப்பிடமாகும். அப்பொருளினிடத்திலிருந்தே இன்பம் தோன்றுகின்றது. அதுவே இன்ப நிலையைத் தோற்றுவிக்கின்றது. இத்தகைய உயர்ந்த பொருள்—இன்பத்தைத் தோற்றுவிக்கின்ற பொருள்—நம் அகத்தே இருக்கையில், உலகப் பொருள்கள் இன்பம் அளிக்கின்றன என்றெண்ணுதல் எத்துணைப் பேதைமை!

உங்கள் நல்ல நினைப்புகளால் நீங்கள் நரகத்தைச் சுவர்க்கம் ஆக்கலாம்; சுவர்க்கத்தை நரகமாக்கலாம். எல்லாம் உங்களைப் பொருத்துள்ளது. இன்பத்தையோ துன்பத்தையோ நீங்களே கற்பித்துக்கொள்கிறீர்கள். ஆதலின், இன்ப நிலை உங்களுக்குள் நிலைபெற்றுள்ளது என்பதை உணருங்கள். உங்கள் வாழ்க்கை இன்பமயமாகும்.

[இது "Happiness Within" என்ற தலையங்கத்துடன் **சுவாமி இராமதீர்த்தர், M. A.** அவர்கள் அமெரிக்காவில்—**சான்பிரான்ஸிஸ்கோ**வில் இயற்கைத் தத்துவ நூற் சங்கத்தில் (Acadamy of Science) 1902-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ஆந் தேதியன்று செய்த சொற்பொழிவின் சுருக்கம்.]

# 24. நாட்டுக்கு உழைத்த டாட்டா

*நாம் வாழ்க்கையில் உயர்வடைய வேண்டுமாயின், பெரு மக்களின் வரலாறுகளைப் படித்து அவர்களைப் போல நடக்கப் பயிலல் வேண்டும்.*

—ஜான் ரஸ்கின்

ஜான் ரஸ்கின் கூறுவது உண்மையே. பெருமக்கள் வரலாறுகள் நம்மை ஊக்கி உற்சாகப்படுத்துகின்றன. 'அவர்களைப் போல நாமும் உழைப்போமாயின், உயர்வைப் பெறலாம்' என்னும் உறுதியான எண்ணம் நம் மனத்தே எழுகின்றது; நாம் முயற்சி செய்கிறோம்; வெற்றியைப் பெறுகிறோம். இப்பொழுது உலகத்தில் உள்ள மிகப் பெரிய மனிதர்கள் அவர்களுக்கு முன் இருந்த பெருமக்களின் வரலாறுகளைப் படித்து, முயன்று, உயர்ந்தவர்களே ஆவார்கள். தளர்ந்த போது உதவும் ஊன்றுகோலைப் போல இப் பெருமக்கள் வரலாறுகள் நம்மை உற்சாகப்படுத்தி வாழ்க்கையில் பல மாறுதல்களை உண்டாக்குகின்றன. ஆதலின், உலகப் பெருமக்கள் வரலாறுகளை ஒவ்வொருவரும் ஊன்றிப் படித்தல் வேண்டும். இவ்வமயம் நம் இந்தியப் பெருமக்களில் ஒருவரும் இந்தியத் தொழில்களைப் பெருக்கிய வள்ளலாரும் ஆகிய ஜாம்ஷெட்ஜி நசர்வாஞ்சி டாட்டா என்பாரது உழைப்பு மிகுந்த வரலாற்றினை அறிவோம்.

டாட்டா, பரோடா இராச்சியத்தில் உள்ள நவசாரி என்னும் கிராமத்தில் 1839-ஆம் ஆண்டு பிறந்தவர். அவர் பாரசீகக் குருமார் வகுப்பைச் சேர்ந்தவர். அவர் தந்தையார் சைனாவுடன் வியாபாரம் நடத்தி வந்தார்

டாட்டா, பம்பாயில் ஆங்கிலக் கல்வி கற்று, வயது வந்ததும், தந்தையாருடன் வியாபாரத் துறையில் இறங்கினார்; வியாபாரத்தைப் பெருக்கச் சைனு சென்று, சிறிது காலம் அங்குத் தங்கி இருந்து, வியாபார முறைகளைக் கற்றறிந்தார்.

அவர் சைனுவை விட்டுப் பம்பாய்க்கு வந்ததும் அவருக்குப் புதிய யோசனை ஒன்று தோன்றியது. அவ்வமயம் அமெரிக்காவில் உள் நாட்டுக் கலகம் ஏற்பட்டு இருந்ததால் அமெரிக்கப் பருத்தியை ஐரோப்பாவுக்கு அனுப்பக் கூடவில்லை. இதனை உணர்ந்த டாட்டா இந்தியப் பருத்தியை ஐரோப்பாவுக்கு அனுப்பத் துணிந்தார். இம்முயற்சியில் அவருக்குப் பெருத்த வருமானம் உண்டாயிற்று. ஆனால், அது சிறிது காலமே நடந்தது. அமெரிக்கக் குழப்பம் நின்றதும் இந்தியப் பருத்தி வியாபாரமும் நின்றது. ஏன்? அமெரிக்கப் பருத்தி வழக்கம் போல ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்டது.

இவ்வியாபாரம் நின்ற சமயம் ஆப்பிரிக்காவில் அபிசீனிய அரசருக்கும் ஆங்கிலேயர்க்கும் போர் தொடங்கிற்று. அப்போரில் சம்பந்தப்பட்ட வெள்ளையர்க்கு டாட்டா, இந்தியாவினின்றும் உணவுப் பொருள்களைக் கப்பல் மூலமாக அனுப்பி வந்தார். இதனாலும் அவர் சிறிது ஊதியம் அடைந்தார்.

இம்முயற்சிக்குப் பின் அவர் வேறு வழியில் வேலை செய்யத் தொடங்கினார். அவர் பருத்தித் தொழிலை விருத்தி செய்ய முனைந்தார்; உடனே இங்கிலாந்து சென்றார்; மான்செஸ்டர் என்னும் இடத்திற்

சிறிது காலம் தங்கிப், பருத்திக் கைத்தொழிலைப் பற்றிய பல விஷயங்களைக் கண்டறிந்து தாய் நாடு மீண்டார்; நாகபுரியில் சக்ரவர்த்தினி ஆலை (Empress Mill) என்ற பெயரோடு பஞ்சாலை ஒன்றை ஏற்படுத்தினார்; அதில் வேலை செய்யும் தொழிலாளர்க்குப் பல வசதிகளை அளித்தார். தொழிலாளரும் ஊக்கங் காட்டி வேலை செய்தனர்; தொழில் வளர்பிறை போல வளர்ந்து வரலாயிற்று.

இந்த ஆலையில் நூற்கப்படும் நூலை விட நேர்த்தியான நூல் நூற்கத் தக்க வேறு பஞ்சாலை ஒன்றைத் தாபிக்க அவர் விரும்பினார்; அதற்காகப் பலவாறு யோசித்து முடிவில் சுதேசிப் பஞ்சாலை என்ற பெயரோடு ஒரு பஞ்சாலையை ஏற்படுத்தினார்; சில ஆண்டுகட்குள் இரு ஆலைகளும் இந்தியாவில் முதல்தர ஆலைகளாகப் பரிணமித்தன. ஆயிரக் கணக்கான ஏழை இந்தியர் பிழைப்புப் பெற்றனர். டாட்டாவும் இலாபம் அடைந்தார்.

இம் முயற்சிகளோடு டாட்டா நின்றுவிடவில்லை அவர், பஞ்சாலைகளுக்கு வேண்டிய உயர்தரப் பருத்தியை இந்தியாவிலேயே பயிரிடல் வேண்டும் என்பதை விரும்பினார்; அதற்காகப் பலவாறு ஆராய்ச்சி செய்து முடிவில், உயர்ந்த பருத்தியை இந்தியாவில் பயிரிடலாம் என்பதை நிரூபித்துக் காட்டினர். அவரது உழைப்பால் நமது நாட்டில் இன்று அமெரிக்க நாட்டுப் பருத்தி முதலிய உயர்தரப் பருத்திச் செடிகள் பயிராக்கப்படுகின்றன! இந்திய விளை பொருள்களில்

பருத்தி மிகச் சிறந்தது. அதனைச் சிறப்புறச் செய்த டாட்டாவை நாம் மறக்க இயலுமோ? கூறுங்கள்.

இந்தியாவில் நூற்கப்படும் நூலைச் சைனு, ஜப்பான் முதலிய நாடுகளுக்கு அனுப்பக் கூடாத வகையில் ஆங்கிலக் கப்பல் வியாபாரிகள் கட்டணத் தொகையை உயர்த்திவிட்டார்கள். இதனை அறிந்த டாட்டா மற்றை வியாபாரிகளையும் கலந்து ஜப்பான் கப்பல் முதலாளிகளோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி இந்தியப் பருத்தி நூல் குறைந்த கட்டணத் தொகைக்கு ஜப்பான் கப்பல்களில் ஏற்றப்பட்டன. இதனை அறிந்த ஆங்கிலக் கப்பல் முதலாளிகள் திடுக்கிட்டு, டாட்டாவின் நுண்ணறிவினை வியந்து, தங்கள் கட்டணத் தொகையைக் குறைத்துக்கொண்டார்கள்.

டாட்டா, தம் அறிவு நுட்பத்தை மேலும் இந்தியர் நன்மைக்குச் செலவழித்தார். பருத்தித் தொழிலோடு நின்று விடாமல், இரும்புத் தொழிலை உயர்வடையச் செய்ய அவாக் கொண்டார்; இந்தியாவில் இரும்பு கிடைக்கக் கூடிய இடங்களைக் கண்டறிந்தார்; பம்பாய்க்கருகில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தினுர்; அதில் வேலை செய்பவர் வசிப்பதற்கு வீடுகள் அமைத்துத் தந்தார்; அவ்வூர்க்கு ஜாமஷெட்பூர் எனப் பெயரிட்டார். அத்தொழிற்சாலை இரும்புத் தொழிலை மிக உயர்ந்த முறையில் பெருக்கி வருகின்றது; மேனுட்டு இரும்புத் தொழிற்சாலைகளைப் போல விளங்கி வருகின்றது; இப்பொழுது இந்தியாவுக்கு வேண்டும் இரயில்வே தண்டவாளங்களையும் பிற இரும்

புச் சாமான்களையும் உதவி வருகின்றது. இத்தகைய இரும்புத் தொழிற் சாலை மேலும் ஒன்று இருக்குமாயின், இந்தியா அயல் நாட்டு இரும்புச் சாமான்களைச் சிறிதளவேனும் எதிர்பார்க்க வேண்டுவதில்லை. இப்பொழுதுள்ள செல்வர்கள் டாட்டாவைப் பின்பற்றுவார்களா ?

டாட்டாவைப் போல நம் நாட்டுச் செல்வர் பலர் தேசப் புனருத்தாரணத்தின் பொருட்டுப் பருத்தி ஆலைகளையும் சர்க்கரை ஆலைகளையும் காகித ஆலைகளையும் இரும்புத் தொழிற்சாலைகளையும் கண்ணாடித் தொழிற் சாலைகளையும் ஏற்படுத்துவார்களானால், நமது நாட்டில் வேலையில்லாமல் பட்டினியால் மடியும் இலட்சக் கணக்கான மக்களைக் காக்கும் பெரு வள்ளல்கள் ஆவார்கள். நமது நாடு பிற நாட்டுச் சாமான்களை எதிர்பார்க்க வேண்டுவதாயிராது. நாடும் செல்வ நிலையில் உயரும் ! நாமும் உயர்வோம் !!

டாட்டா, மேனாடு சென்று விஞ்ஞான ஆராய்ச்சியில் அறிவு பெற விரும்பும் இந்தியர்க்கு உதவி செய்ய நிதி ஒன்றை வைத்துள்ளார். அப்பண உதவியால் பல வாலிபர் மேனாடு சென்று கைத்தொழில் பொருட்டு விஞ்ஞான சாஸ்திர அறிவைப் பெற்று மீண்டுத் தம் தாய் நாட்டு உயர்வுக்கே உழைத்து வருகின்றனர். அத்தகைய உயர்தரப் பயிற்சியைப் பெங்களூரில் அளிக்கும்படி டாட்டா ஆராய்ச்சிக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது 1910-ஆம் ஆண்டிலிருந்து சிறந்த தேசத் தொண்டாற்றி வருகின்றது. இன்று அக்கழ

கத்தின் தலைவராக விளங்குபவர் நோபல் பரிசு பெற்ற உலக விற்பன்னராகிய சர் சி. வி. இராமன் என்பவர்.

சிறந்தவையும் நாட்டுக்கு உகந்தவையுமான இத் தகைய தொழிற்சாலைகளை நம் நாட்டுச் செல்வர் முயன்று தாபிப்பாராயின், நம் நாட்டு வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும்; நாட்டுக் கைத்தொழில்களும் விருத்தியாகும். நாமும் பொருளாதாரத் துறையில் முன்னேறுவோம்.

---

## 25. அற்பம் அற்பம் அன்று

1. *அற்பமாகத் தோன்றுவதை அற்பமாகக் கருதும் அறிவிலி, இவ்வுலகில் அழிந்து விடுவான்.*

—**சாலமன்**

2. *சிறிய காரியங்களில் கவலை இருந்தாற்றான் பெரிய காரியங்களிலும் கவலை பிறக்கும்.*

—**மார்டின் லூதர்**

நமது வாழ்க்கையில் ஒவ்வொரு நாளிலும் உண்டாகும் சாதாரண நிகழ்ச்சிகளையும் அற்பமெனத் தள்ளி விடுவதற்கு இல்லை. ஆழ்ந்து யோசிப்பின், உலகில் அற்ப நிகழ்ச்சிகளே இல்லை என்னலாம். மிகச் சிறிய விஷயங்களாற்றான் இவ்வுலக வரலாறும் மாறுதல் அடைந்து விடுகிறது.

ஜிப்ஸிமாத் என்பவை ஒரு வகைப் புழுக்கள். அவற்றால் நூதனமான பட்டு உற்பத்தி செய்யலாம் என்றெண்ணிய அமெரிக்கர் ஒருவர், அவற்றைப் பிரான்சு தேசத்திலிருந்து கொணர்ந்தார்; தமது வீட்டில் ஜன்ன

லுக்கு அருகில் இருந்த மேஜை மீது வைத்துப் பரி சிலனை செய்துகொண்டு இருந்தார்; ஜன்னல் திறந்து இருந்தது. அவ்வமயம் யாரோ அழைத்ததன் மீது வெளியே சென்ருர். அவர் திரும்பி வருவதற்குள் அப் புழுக்கள் ஜன்னலுக்கு வெளியே காற்ருல் கொண்டு செல்லப்பட்டன. புழுக்களைக் காணுத அமெரிக்கர் தம் முயற்சி வீணானதைக் கண்டு வருந்தி வாளா இருந்த னர்.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. அவ்வமெரிக்கர் இல்லத்தைச் சுற்றி இருந்த அழகிய பூஞ்சோலைகளும் காடுகளும் இலைகள் இன்றிப் பட்டு நின்றன. இதற்குக் காரணத்தை ஆராய்ந்தபோது, ஜிப்ஸிமாத் என்ற பூச் சிகளாற்ருன் அக்காடுகட்கும் சோலைகட்கும் இக்கேடு உண்டாயிற்று என்பது தெரிந்தது. அப்புழுக்களை அழித்து அக்காடுகளைச் சீர்திருத்தம் பண்ணக் கோடிக் கணக்கான டாலர்கள் செலவழிக்கப்பட்டன. ஆ! அற்ப மான புழுக்களால் எத்துணைக் கோடி டாலர்கள் நஷ்ட மாயின! அவ்வமெரிக்கர் ஜன்னலை மூடிச் சென்றிருந் தாராளுல், இப்பெரு நஷ்டம் ஏற்பட்டிருக்குமா?

அமெரிக்கக் காங்கிரஸ் சபையில் நிரந்தரமாக இரு கட்சிகள் ஏற்பட்டமைக்குக் கேவலம் ஒரு பன்றி கார ணம் எனக் கூறப்படுகிறது. காப்டன் கீன் என்பார் ஒரு பன்றியை வளர்த்து வந்தார். அவர் ஷெர்மன் என்னும் பெண்மணி வளர்த்த பன்றி ஒன்றைத் தமதாக்கிக் கொண்டார். இச்செய்தி நீதிபதி முன் விசாரணைக்கு வந்தது. இதற்குள் கீன் என்பார் தமக்கு உரிய பன்றி யைக் கொன்று தின்றுவிட்டார். எஞ்சி இருந்த ஒரு

பன்றி யாருடையது என்பதைப் பற்றி ஷெர்மன் நிச்சயிக்கக் கூடவில்லை. அவள் கின் தின்றுவிட்ட பன்றி தன்னுடையது என வாதித்தாள். இவ்வழக்கு ஒவ்வொரு நீதிமன்றமாகச் சென்று, முடிவில் அமெரிக்கக் காங்கிரஸுக்குச் சென்றது. அங்கு இவ்விவாதம் ஏழு நாட்கள் நடந்தது. இரு கட்சிகள் ஏற்பட்டன. ஒன்று கின் பக்கமாகப் பேசியது; மற்றொன்று ஷெர்மன் சார்பாக வாதாடியது. இவ்வாதப் போர் ஓராண்டு நீடித்தது. இவ்வாதம் காரணமாக, அது வரை ஒன்றுபட்டிருந்த காங்கிரஸ் சபை இரண்டு பெரும் கட்சிகளாக மாறியது என்று கூறப்படுகிறது. அற்பம் என்று நாம் எண்ணும் பன்றியால் உண்டான செயலைப் பாருங்கள்!

காகிதப் பென்சிலின் மற்றோர் முனையில் ரப்பர் (Rubber) வைத்தவனது நுட்ப அறிவை வியந்து அவனுக்கு இரண்டு லட்சம் டாலர்கள் பரிசளிக்கப் பட்டன. பனிக்கட்டியில் உருண்டு போவதற்கு உரிய வண்டியைச் செய்தவனுக்கு இரண்டரை லட்சம் டாலர்கள் அளிக்கப்பட்டன. இவ்வாறு மிக அற்பமெனக் கருதப்படுவன மக்களால் பாராட்டப்பட்ட காலம் ஒன்றிருந்தது! இவை அற்பம் என இப்போது தோன்றினாலும், முதலில் செய்தவர் நுட்ப அறிவு உடையவரே அல்லரோ? இவை அற்பம் எனத் தள்ளி இருப்பார்களாயின், அவர்கள் பரிசும் பெருமையும் பெற்றிருத்தல் இயலுமோ?

பாதையில் படிந்திருந்த குதிரைக் குளம்பின் சுவடுகளைக் கண்ட பின்னரே 'ஜான் கூடன் போர்க்' என்பார், யோசித்து, அச்செழுத்துகளைக் கண்டுபிடித்

தார். ஆகவே, அச்சுத் தொழில் விருத்தியானதற்குக் காரணம் கேவலம் குதிரைக் குளம்பின் சுவடுகள்! மரத்திலிருந்து கீழ்நோக்கி விழுந்த ஆப்பிள் பழத்தைப் பற்றி யோசித்ததால் அல்லவா, ஸர் ஐஸக் நியூட்டன் 'பூமிக்கு இழுக்கும் சக்தி உண்டு' என்பதைக் கண்டறிந்தார். அதினின்றும் இயற்கைத்தத்துவ சாத்திரம் மேல் நோக்கி எழுந்தது. அற்பமான ஆப்பிள் பழமன்றோ உலகத்தில் கலை வளர்ச்சிக்குக் காரணமாயிற்று; கடியாரத்தைப் பழுது பார்க்கப் பழகி வந்த சிறுவன் ஒருவன், அப்பரிசீலனையின் பொருட்டுக் கண்ணில் அணியும் 'லென்ஸ்' ஒன்றைக் கையிற் பிடித்து உற்று நோக்கிக் கொண்டு இருந்த போது, சேய்மையில் நின்ற கோபுரம் ஒன்று அண்மையில் நிற்பதாகத் தோற்றியது. அச் சிறுவன் அவ்வுண்மையை மேலும் ஆராய்ந்து தூர திருஷ்டிக் கண்ணாடியைக் கண்டறிந்தான்.

இடி, மின்னல், மழை இவை கலந்தடித்த போது காற்றாடிவிட்டுக்கொண்டிருந்த பெஞ்சமின் பிராங்க்ளின் என்பவர் மின்சார சக்தி ஒன்று இருப்பதாகக் கண்டறிந்தார். கேவலம் உலை நீர் கொதித்து நீராவி, பாத்திரத்தின் மூடியைத் தள்ளியதைக் கண்ட ஜேம்ஸ் வாட் நீராவியின் சக்தியைக் கண்டறிந்தார்; அச் சக்தியைக் கொண்டு இன்று உலகில் புகை வண்டிகள் ஓடுகின்றன; கப்பல்கள் கடலிற் பிரயாணம் செய்கின்றன. குரூக்ஸ் குழாயில் தோன்றிய சிறிய ஒளியாலன்றோ எக்ஸ்-ரேயின் தத்துவம் தெரியலாயிற்று! இங்ஙனம் மிகச் சிறிய விஷயங்களால் உலகம் நாகரிகம் பெற்றதெனில், 'அற்

பம் இது' என்று நினைத்து எதனையேனும் தள்ள இயலுமா? கூறுங்கள்.

இராபர்ட் ப்ரூஸ் என்பவர் ஸ்காட்லண்டு தேசத்து அரசர். அவர் ஆறு முறை பகைவரால் தோற்கடிக்கப்பட்டு ஓடிக் குகை ஒன்றில் வசித்து வந்தார். அக்குகையில் சிலந்தி ஒன்று கூடு கட்டி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்தைச் சேர ஆறு முறை முயன்று தவறியது; ஏழாம் முறை வெற்றி பெற்றது. அதனைக் கவனித்து வந்த ப்ரூஸ் உணர்ச்சி பெற்றார்; ஏழாம் முறையாகப் படை திரட்டிப் பகைவர் மேல் போர் தொடுத்தார்; வெற்றி பெற்றார். இவ்வெற்றி எதனால் ஏற்பட்டது? சிலந்தி கற்பித்த பாடத்தினால் அன்றோ?

ஆல்ப்ரெட் என்ற ஆங்கில அரசர் பகைவர்க்குப் பயந்து குகை ஒன்றில் ஒளிந்துகொண்டார்; பகைவர் அவரைப் பிடிக்கத் தேடி அலைந்து முடிவில், அக்குகையருகில் சென்றனர். குகையின் முன்புறத்திற் சிலந்தி ஒன்று கூடு கட்டி இருந்தது. அதனைப் பார்த்த பகைவர் 'இக்குகைக்குள் ஆல்ப்ரெட் இருக்க மாட்டார்; மனித வாசம் இருப்பின், சிலந்தி கூடு கட்டாது' என்று எண்ணிக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றனர். கேவலம் ஒரு சிலந்தியால் ஒரு பெரிய அரசரது உயிர் காப்பாற்றப்பெற்றது! இச்சிறிய பூச்சியால் இங்கிலாந்து தேச சரித்திரம் எத்தகைய மாறுதல் அடைந்தது, பாருங்கள்!

இவ்வாறு, மிகச் சிறிய விஷயங்களால்-அற்பமான செயல்களால் உலக சரித்திரம் மாறுதல் அடைகின்றது! மனித வாழ்க்கை மாறுதல் பெறுகின்றது! உலக

நாகரிகமே மாறுதல் உறுகின்றது! எனவே, மனித வாழ்க்கையில் உண்டாகும் சுகம், துக்கம், பெருமை, சிறுமை முதலானவை மிகச் சிறிய நிகழ்ச்சிகளாலேயே உண்டாகின்றன என்பது வெளியாகின்றது அன்றோ? ஆதலின், சிறு பிள்ளைகளாகிய நீங்கள் உங்கள் வாழ்க்கையில் தோன்றும் சிறிய நிகழ்ச்சிகளை அசட்டை செய்யாமல், யோசித்துத் திறம்படப் பயன்படுத்துவீர்களானால், உலகில் பல உயரிய காரியங்களைச் சாதிக்கலாம்! உயரிய இன்ப நிலையையும் குன்றாப் புகழையும் பெறலாம்!!

---

கேஸரி அச்சுக்கூடம், சென்னை.